# இரண்டாம் பருவம்

## இயல் 1 — 1. விவேக சிந்தாமணி — செய்யுட்பகுதி

### மனப்பாடப்பகுதி

தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு
தியங்கியே கிடந்ததைக் கண்டு
தான்அதைச் சம்பு வின்கனி என்று
தடங்கையில் எடுத்துமுன் பார்த்தாள்
வான்உறு மதியம் வந்தென்(று) எண்ணி
மலர்க்கரம் குவியுமென்(று) அஞ்சிப்
போனது வண்டோ பறந்ததோ பழந்தான்
புதுமையோ இதுஎனப் புகன்றாள்.

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக.**

1. தியங்கி - ---------------
2. மதியம் - ---------------
3. சம்பு - ---------------
4. புகன்றாள் - ---------------

**விடைகள்**

1. மயங்கி
2. நிலவு
3. நாவல்
4. கூறினாள்

**2. பிரித்து எழுதுக.**

1. மலர்க்கரம் - -----------------
2. குவியுமென்று - ------------------

1. மலர் + கரம்
2. குவியும் + என்று

**3. சேர்த்து எழுதுக.**

1. வான் + உறு - -----------------
2. பழம் + தான் - -----------------

1. வானுறு
2. பழந்தான்

**4. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சம்புவின் கனி எனக் குறிக்கப்படுவது -----------------
2. பெண்ணின் முகத்திற்கு --------------- ஒப்புமையாகக் காட்டப்பட்டுள்ளது.

1. நாவற்பழம்
2. நிலவு

**5. பொருத்துக.**

1. வண்டு - தாமரை
2. மங்கையின் முகம் - நாவற்பழம்
3. மலர்க்கரம் - வான்நிலவு

**விடைகள்**

1. வண்டு - நாவற்பழம்
2. மங்கையின் முகம - வான்நிலவு
3. மலர்க்கரம் - தாமரை

### ஆ) குறுவினாக்கள்

**1. விவேகசிந்தாமணி – குறிப்பு எழுதுக.**

1. விவேகசிந்தாமணி என்னும் இந்நூல் புலவர் பலரால் இயற்றப்பட்ட பாக்களின் தொகுப்பு நூல்.
2. இந்நூலைப் பாடிய புலவர்கள் பெயர்களும், தொகுத்தவர்களின் பெயரும் தெரியவில்லை.

**2. தேனையுண்ட வண்டு எவ்வாறு தோற்றமளித்தது?**

மலர்த்தேனையுண்ட வண்டானது நாவற்பழம் போல் தோற்றமளித்தது.

### இ) சிறுவினாக்கள்

**1. விவேகசிந்தாமணிப் பாடலில் அமைந்துள்ள கற்பனைநயத்தை விளக்குக.**

**விவேகசிந்தாமணிப் பாடலில் அமைந்துள்ள கற்பனைநயம்:**

1. வண்டு நாவற்பழமாதல்
2. மங்கையின் முகம் நிலவாதல்
3. மங்கையின் கை தாமரை மலராதல்
4. வண்டு பறந்ததால் மங்கையின் குழப்பம்

1. **வண்டு நாவற்பழமாதல் :**
தேனை உண்ணும் வண்டானது தாமரை மலரில் இருந்த தேனை உண்டு மலரில் மயங்கிக் கிடந்தது. கருநிறத்தில் தோற்றமளித்த வண்டினை 'நாவற்பழமோ' எனக்கருதி மங்கை தன் கையில் எடுத்துப் பார்த்தாள்.
2. **மங்கையின் முகம் நிலவாதல் :**
மலரில் உள்ள தேனையுண்ட வண்டானது, மயக்கம் தெளிந்து மங்கையின் முகத்தை வான்நிலவு எனக் கருதியது.
3. **மங்கையின் கை தாமரை மலராதல் :**
மங்கை தன் உள்ளங்கையில் வண்டை வைப்பதற்காக விரல்களைக் குவித்தலால், அக்கருநிற வண்டானது அவளின் கையைத் தாமரைமலர் என்றும் நினைத்து மயங்கியது.
4. **வண்டு பறந்ததால் மங்கையின் குழப்பம்** :
வண்டானது நிலவு தோன்றினால் தாமரை குவிந்துவிடும். மலர் குவிந்து தன்னை மூடிவிடும் என அஞ்சி வண்டானது பறந்து சென்றது. ஆதலால் மங்கை, பறந்தது வண்டா, பழமா? என்ன விந்தையாக இருக்கிறதே என மயங்கிக் கூறினாள்.

## இயல் 1 — 2. பாரதத்தாய் — செய்யுட்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக.**

| | | விடைகள் |
|---|---|---|
| 1. வாய்மை | - ---------------- | 1. **உண்மை** |
| 2. துலங்குதல் | - --------------- | 2. **விளங்குதல்** |
| 3. கதிரவன் | - --------------- | 3. **சூரியன்** |
| 4. களையும் | - --------------- | 4. **நீக்கும்** |
| 5. சேய்மை | - -------------- | 5. **தொலைவு** |
| 6. தாள்மலர் | - -------------- | 6. **பாதம்** |
| 7. வண்மை | - --------------- | 7. **வள்ளல் தன்மை** |
| 8. கருணை | - -------------- | 8. **இரக்கம்** |

**2. பிரித்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. செங்கதிரவன் | - --------------- | 1. **செம்மை + கதிரவன்** |
| 2. தாய்மையன்பு | - -------------- | 2. **தாய்மை + அன்பு** |

**3. சேர்த்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. பாரதம் + தாய் | - -------------- | 1. **பாரதத்தாய்** |
| 2. சேய்மை + உற்ற | - -------------- | 2. **சேய்மையுற்ற** |

**4. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

| | |
|---|---|
| 1. காந்திபுராணம் இயற்றியவர் ----------------- | 1. **அசலாம்பிகை அம்மையார்** |
| 2. காந்திபுராணத்தின் பாட்டுடைத்தலைவர் -------------- | 2. **மகாத்மா காந்தி** |

### ஆ) குறுவினாக்கள்

**1. காந்திபுராணம் - குறிப்பு எழுதுக.**
1. காந்தியடிகளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது இந்நூல்.
2. இந்நூல், ஈராயிரத்து முப்பத்துநான்கு பாடல்களைக் கொண்டது.

**2. அசலாம்பிகை அம்மையார் - குறிப்பு எழுதுக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | அசலாம்பிகை அம்மையார் |
| பிறந்த ஊர் | : | திண்டிவனம் அருகில் உள்ள இரட்டணை |
| இயற்றிய நூல்கள் | : | ஆத்திசூடி, வெண்பா, திலகர் புராணம், குழந்தை சுவாமிகள் பதிகம். |
| சிறப்பு | : | சிறந்த பேச்சாளர். திரு.வி.க அவர்களால் **'இக்கால ஔவையார்'** என்று பாராட்டப்பெற்றவர். |
| இறுதிப்படைப்பு | : | இறுதிக்காலத்தில் நானூற்று ஒன்பது பாடல்களைக் கொண்ட **'இராமலிங்க சுவாமிகள் சரிதம்'** என்னும் செய்யுள் நூலை இயற்றினார். |

**இ) சிறுவினா**

1. **காந்தியடிகளின் பண்புநலன்களைப் பாரதத்தாய் பாடல்வழிக் குறிப்பிடுக.**
**காந்தியடிகளின் பண்புநலன் :**
    1. உண்மை, அறம், பிறருடைய துன்பத்தை நீக்கும் திறமை, தியாகம், இணையில்லாத ஒழுக்கம், போன்றவைகளை இக்கலிகாலத்தில் வளர்ந்து விளங்கச் செய்பவர்.
    2. தீமை, துன்பம், ஆகியவற்றை அகன்றோடச் செய்யும் கருணைக் கதிரவன் போன்ற தாய்மை உள்ளம் கொண்டவர் என காந்தியடிகளின் பண்புநலன்களைப் பாரதத்தாய் பாடல்வழி அசலாம்பிகை அம்மையார் குறிப்பிடுகிறார்.

| இயல் 1 | இந்திய விடுதலைப்போரில் தமிழகப் பெண்களின் பங்கு | உரைநடைப்பகுதி |
|---|---|---|

**அ) புறவயவினாக்கள்**

**1. பிரித்து எழுதுக.**

| | விடைகள் |
|---|---|
| 1. ஐயாயிரம் - ---------------- | 1. ஐந்து + ஆயிரம் |
| 2. வேடமணிந்து - -------------- | 2. வேடம் + அணிந்து |
| 3. சிறையிலடைத்த - --------------- | 3. சிறையில் + அடைத்த |
| 4. தென்னாடு - -------------- | 4. தெற்கு + நாடு |

**2. சேர்த்து எழுதுக.**

| | |
|---|---|
| 1. விடுதலை + உணர்வு - -------------- | 1. விடுதலையுணர்வு |
| 2. அறம் + போராட்டம் - -------------- | 2. அறப்போராட்டம் |
| 3. தொழில் + பயிற்சி - -------------- | 3. தொழிற்பயிற்சி |

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

| | |
|---|---|
| 1. ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி ---------------- | 1. வேலுநாச்சியார் |
| 2. வேலுநாச்சியார் பிறந்த ஆண்டு ------------------ | 2. கி.பி.1730 |
| 3. சிவகங்கையை ஆண்ட மன்னர் ------------------ | 3. முத்துவடுகநாதர் |
| 4. அஞ்சலையம்மாள் மகளுக்குக் காந்தியடிகள் இட்டபெயர் ---------------- | 4. லீலாவதி |
| 5. சீனிவாச காந்தி நிலையம் அமைத்தவர் ----------------- | 5. அம்புஜத்தம்மாள் |

**ஆ) குறுவினாக்கள்**

1. **வேலுநாச்சியார் - குறிப்பு எழுதுக.**
    1. இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர் செல்லமுத்து சேதுபதி – சக்கந்தி முத்தாத்தாள் இணையருக்குக் கி.பி. 1730 ஆண்டு பிறந்தார்.
    2. வீரமும் நுண்ணறிவும் ஒருங்கே அமையப்பெற்றவர் வேலுநாச்சியார்.
    3. ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி வேலுநாச்சியார்.
    4. ஆயுதப்பயிற்சிமுதல் அனைத்தையும் கற்றுத்தேர்ந்து ஆண்வாரிசாக வளர்க்கப்பட்டார்.

2. **'தென்னாட்டின் ஜான்சிராணி' என்று அழைக்கப்படுபவர் யார்? ஏன்?**
    1. 'தென்னாட்டின் ஜான்சிராணி' என்று அழைக்கப்படுபவர் அஞ்சலையம்மாள்.
    2. காந்தியடிகள் கடலூருக்கு வந்திருந்த போது, அவரைச் சந்திக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது.
    3. அஞ்சலையம்மாள் அதனைப் பொருட்படுத்தாமல், பர்தா வேடமணிந்து குதிரை வண்டியில் காந்தியடிகளை ஏற்றிச்சென்றார்.
    4. அதனால், காந்தியடிகள் அஞ்சலையம்மாளைத் 'தென்னாட்டின் ஜான்சிராணி' என்றழைத்தார்.

### இ) சிறுவினாக்கள்

**1. அஞ்சலையம்மாள் நடத்திய போராட்டங்கள் யாவை?**

1. 1921 – ஆம் ஆண்டு காந்தியடிகளால் தொடங்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்தின் போதே அஞ்சலையம்மாள் தனது பொது வாழ்க்கையைத் தொடங்கினார்.
2. அப்போராட்டத்தைத் தொடர்ந்து நீலன் சிலையை அகற்றும் போராட்டம், உப்புக்காய்ச்சும் போராட்டம், மறியல் போராட்டம், தனியாள் அறப்போராட்டம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகிய அனைத்துப் போராட்டங்களில் கலந்துகொண்டார்.

**2. அம்புஜத்தம்மாளின் குணநலன்களை விவரிக்க.**

1. அம்புஜத்தம்மாள் வசதியான குடும்பத்தில் 1899 ஆம் ஆண்டு பிறந்தார்.
2. தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி எனப் பலமொழிகளையும் திறம்படப் பயின்றவர்.
3. இவர் வசதியான குடும்பத்தில் பிறந்திருந்தாலும் அன்னை கஸ்தூரிபாயின் எளிமையான தோற்றத்தினால் ஈர்க்கப்பட்டு எளிமையாய் வாழ்ந்தார்.
4. பட்டு, பகட்டு, ஆங்கிலமோகம் அனைத்தையும் துறந்தார்.
5. கட்டுப்பாடுகள் மிகுந்த குடும்பத்திலிருந்து தம்மை விடுவித்து நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டார்.
6. நேர்மையான பெண்மணியாய் வாழ்ந்து காட்டினார் அம்புஜத்தம்மாள்.

### ஈ) நெடுவினா

**1. வேலுநாச்சியார் சிவகங்கைச் சீமையை மீட்டெடுத்த நிகழ்வினைத் தொகுத்து எழுதுக.**

**வேலுநாச்சியார் சிவகங்கைச் சீமையை மீட்டெடுத்த நிகழ்வு :**

**1. சிவகங்கை மீது ஆங்கிலேயர் படையெடுப்பு :**

சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர் வேலுநாச்சியாரை மணந்து கொண்டார். ஆங்கிலேயர் 1772 ஆம் ஆண்டு சிவகங்கைச் சீமையின் மீது படையெடுத்தனர்.

**2. சிவகங்கை மன்னர் மரணம் :**

சிவகங்கை மீது படையெடுத்த ஆங்கிலேயருக்கும், முத்துவடுகநாதருக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. அப்போரில் மன்னர் முத்துவடுகநாதர் வீரமரணமடைந்தார்.

**3. ஐதர் அலியின் ஆதரவு :**

1. முத்துவடுகநாதரின் மனைவி வேலுநாச்சியார், மைசூர் மன்னர் ஐதர்அலியைச் சந்தித்து, ஆங்கிலேயரை எதிர்ப்பது குறித்துக் கலந்து பேசினார்.
2. வேலுநாச்சியார்க்கு உதவ விரும்பிய ஐதர்அலி, ஐயாயிரம் படைவீரர்களை அவருடன் அனுப்பினார்.

**4. வீரர் படைக்குத் தலைமையேற்ற மங்கை :**

1. மருது சகோதரர்களுடன் வீரர் படைக்குத் தலைமையேற்றுச் சென்ற வேலுநாச்சியார் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார்.
2. அப்போரில், கணவரைக் கொன்றவர்களை வென்று, 1780 ஆம் ஆண்டில் சிவகங்கையை மீட்டார்.

## இயல் 1 | 3. மரத்தின் வேண்டுகோள் | துணைப்பாடப்பகுதி

### நெடுவினா

**1. மரம் கண்ணனிடம் விடுத்த வேண்டுகோளைக் கட்டுரையாக விவரிக்க.**

| | |
|---|---|
| 1. | முன்னுரை. |
| 2. | பூத்துக் குலுங்கும் பசுமைச் சோலை. |
| 3. | அழிவுக்குக் காரணம் மனிதர்களே! |
| 4. | மக்கள் தொகைப்பெருக்கத்தின் விளைவுகள். |
| 5. | நெகிழியால் விளையும் தீமைகள். |
| 6. | மரத்தின் வேண்டுகோள். |
| 7. | முடிவுரை. |

**1. முன்னுரை :**

இயற்கையைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். ‘இயற்கைச் சமநிலை’ இருத்தல் வேண்டும் என்பதை நாம் மறந்து செயல்பட்டதால், நாம் இன்று பலவித இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

**2. பூத்துக் குலுங்கும் பசுமைச் சோலை. :**

மரம் கண்ணனிடம், சில ஆண்டுகளுக்கு முன்னால் இந்த இடம் பூத்துக் குலுங்கும் சோலையாக இருந்தது. எங்கும் பசுமை நிறைந்த மரங்களும், செடி கொடிகளும், பலவிதப் பறவைகளின் ‘கீச், கீச்’ என

தம் இனிய ஒலியால் எங்கும் இசை இன்பத்தைத் தந்தன. நன்கு வளர்ந்த மரங்களின் கிளைகளில் ஊஞ்சல் கட்டி ஆடும் சிறுவர் சிறுமியர்கள் என இனிமையாக இருந்தது என்றது மரம்.

**3. அழிவுக்குக் காரணம் மனிதர்களே! :**

நன்குத் தழைத்து வளர்ந்த பெருமரங்களின் நிழலில் மக்களும், கால்நடைகளும் தங்கி ஓய்வெடுத்தனர். ஆனால் இன்று, பசுமையே இருந்த இடமே தெரியாமல் அழிக்கப்பட்டுவிட்டன. நான் மட்டும் தான் தனித்து நிற்கிறேன். அவ்வழிவுக்குக் காரணம் மக்களே! எனக் கூறி கண்ணீர் வடித்தது மரம்.

**4. மக்கள் தொகைப்பெருக்கத்தின் விளைவுகள் :**

இயற்கை அழிவிற்கான காரணங்களில் முதன்மையானது மக்கள்தொகைப் பெருக்கம் ஆகும். மக்கள் தொகையானது அதிகரிக்க அதிகரிக்க இடப்பற்றாக்குறையால் விளைநிலங்கள் எல்லாம் வீடுகளாக்கப்பட்டன. அதுமட்டுமின்றி காடுகளும் அழிக்கப்பட்டுக் குடியிருப்புகளாய் ஆகிவிட்டன.

**5. நெகிழியால் விளையும் தீமைகள் :**

இயற்கை அழிவிற்கான மற்றொரு காரணம் நெகிழிகள்(பிளாஸ்டிக்) ஆகும். இவை மண்ணோடு மண்ணாக மக்கிப்போவதற்கு நெடுங்காலம் ஆகும். மக்கள் நெகிழிகளால் ஆன பொருள்களைப் பயன்படுத்திவிட்டு மண்ணில் போடுகின்றனர். அதனால் வேர்களின் வளர்ச்சி தடைப்பட்டு அழிய நேரிடுகிறது. நெகிழியால் மரம் செடி, கொடிகள் வளர்வதற்குத் தேவையான காற்றும் நீரும் போதிய அளவில் கிட்டுவதில்லை. இதனால் எங்களுக்கு அழிவு ஏற்படுகிறது.

**6. மரத்தின் வேண்டுகோள் :**

இயற்கையைப் போற்றுங்கள்; இயற்கையை அழிப்பதை நிறுத்த வேண்டும்; மக்கள் தொகைப்பெருக்கத்தினைக் கட்டுப்படுத்துங்கள்; காட்டு வளங்களைப் பெருக்க வேண்டும்; சுற்றுப்புறச்சூழல் மாசடையாமல் காத்திட வேண்டும் என மரம் வேண்டுகோள் விடுத்தது.

**7. முடிவுரை :**

இயற்கையானது அழிக்கப்படுவதால் அவற்றிற்கு இன்று அழிவு: நாளை நமக்கு பேரழிவு" என்பதை மனதில் கொண்டு மனம் போன போக்கில் இயற்கையினை அழிப்பதை நிறுத்த வேண்டும். இயற்கைச் சமநிலையை ஏற்படுத்த வேண்டும். இயற்கையைப் பாதுகாக்க வேண்டும்.

## இயல் 1 — 3. தொகைநிலைத்தொடர் — இலக்கணப்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. வளர்பிறை என்பது
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) வேற்றுமைத்தொகை
2. செம்மொழி என்பது
   அ) பண்புத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை இ) வினைத்தொகை
3. கயல்விழி என்பது
   அ) வேற்றுமைத்தொகை ஆ) உவமைத்தொகை இ) பண்புத்தொகை
4. மா, பலா, வாழை என்பது
   அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) உவமைத்தொகை

விடைகள்

1. **வினைத்தொகை**
2. **பண்புத்தொகை**
3. **உவமைத்தொகை**
4. **உம்மைத்தொகை**

**2. பொருத்துக.**

| | | | விடைகள் |
|---|---|---|---|
| 1. வினைத்தொகை | - நாலிரண்டு | | - **செய்தொழில்** |
| 2. உவமைத்தொகை | - செய்தொழில் | | - **மதிமுகம்** |
| 3. உம்மைத்தொகை | - பவளவாய் பேசினாள் | | - **நாலிரண்டு** |
| 4. அன்மொழித்தொகை | - மதிமுகம் | | - **பவளவாய் பேசினாள்** |

**3. பின்வரும் சொற்கள் எவ்வகைத் தொகைநிலைத்தொடர்கள்?**

| | | | |
|---|---|---|---|
| 1. கருங்கண் | - **பண்புத்தொகை** | 2. வெற்றிலை பாக்கு | - **உம்மைத்தொகை** |
| 3. புத்தகம் படித்தான் | - **வேற்றுமைத்தொகை** | 4. வளர்புகழ் | - **வினைத்தொகை** |
| 5. மலர்முகம் | - **உவமைத்தொகை** | 6. பொற்றொடி வந்தாள் | - **அன்மொழித்தொகை** |

## ஆ) குறுவினாக்கள்

**1. தொகைநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

**தொகைநிலைத்தொடர் வகைகள்** : ஆறு வகைப்படும்.

**அவையாவன,** 1. வேற்றுமைத்தொகை 2. வினைத்தொகை 3. பண்புத்தொகை 4. உவமைத்தொகை 5. உம்மைத்தொகை 6. அன்மொழித்தொகை

**2. வினைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.**

**வினைத்தொகை** : காலம் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து வரும் பெயரெச்சம் வினைத்தொகை எனப்படும். அச்சொற்களை விரித்தால் மூன்று காலத்திற்கும் பொருந்தி வரும்.

**சான்று** : உண்கலம், ஊறுகாய்

**விளக்கம்** : உண்கலம் - உண்டகலம், உண்கின்றகலம், உண்ணும் கலம் என முக்காலத்திற்கும் பொருந்தும்படி விரிந்து பொருள் தருகின்றன. ஆதலால் இவை வினைத்தொகையாகும்.

**3. பண்புத்தொகையைச் சான்றுடன் விளக்குக.**

**பண்புத்தொகை** : 1. பண்பைக் குறிக்கும் சொல், அப்பண்பை உடைய பொருளைக் குறிக்கும் சொல் ஆகிய இருசொற்களுக்கும் இடையே 'ஆகிய' என்னும் பண்புருபு மறைந்து வருவது பண்புத்தொகையாகும்.

2. சொற்களைப் பிரிக்கும்பொழுது நிலைமொழி ஈற்றில் 'மை' விகுதி பெற்று வரும்.

**சான்று** : கருங்குவளை - கருமையான குவளை, சதுரக்கல் - சதுரமான கல்

**விளக்கம்** : கருமை, சதுரம் என்பன பண்புப்பெயர்கள். குவளை, கல் ஆகியன அப்பண்பை உடைய பொருள்களைக் குறிக்கும் பெயர்கள். இடையில் ஆகிய, ஆன என்னும் பண்புருபுகள் மறைந்து வந்துள்ளன.

**4. உம்மைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.**

**உம்மைத்தொகை :**

இருசொற்களுக்கு இடையிலும் ஈற்றிலும் **'உம்'** என்னும் இடைச்சொல் மறைந்து வந்து பொருள் தருவதால் 'உம்மைத்தொகை' எனப்படும்.

**சான்று :** கபிலபரணர், உற்றார் உறவினர்

| உம்மைத்தொகை | விரிவான சொல் |
|---|---|
| கபிலபரணர் | கபிலரும் பரணரும் |
| உற்றார் உறவினர் | உற்றாரும் உறவினரும் |

**விளக்கம் :-** இவை கபிலரும் பரணரும்: உற்றாரும் உறவினரும் என விரியும். இடையிலும் இறுதியிலும் 'உம்' மறைந்துள்ளமையால் இவை 'உம்மைத்தொகை' எனப்படும்.

**5. உவமைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.**

**உவமைத்தொகை :-**

உவமைக்கும், உவமிக்கப்படும் பொருளுக்கும் இடையில் **போல, போன்ற, நிகர, அன்ன** என்னும் உவம உருபுகளுள் ஒன்று தொக்கு நிற்க வரும் தொடர் 'உவமைத்தொகை' எனப்படும்.

**சான்று** :- கயல்விழி

**விளக்கம் :-** கயல் போன்ற விழி. கயல் - உவமை, கை – உவமிக்கப்படும் பொருள் (உவமேயம்), இவ்விரண்டிற்கும் இடையே **'போன்ற'** என்னும் உவமஉருபு மறைந்து வந்துள்ளது.

**6. அன்மொழித்தொகையைச் சான்றுடன் விளக்குக.**

**அன்மொழித்தொகை :-**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைகளை அடுத்து ஈற்றில் வேறு ஒரு சொல் மறைந்து வருமாறு தொடர்வது 'அன்மொழித்தொகை' ஆகும்.

**சான்று** :- பொற்றொடி வந்தாள்

**விளக்கம் :-**
1. பொற்றொடி - பொன்னால் ஆன வளையல் என்பது பொருள்.
2. இது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகும்.
3. இத்தொடர் 'வந்தாள்' என்னும் வினைச்சொல்லைத் தழுவி நிற்பதால் 'பொன்னால் ஆன வளையலை அணிந்த பெண வந்தாள்' எனப் பொருள் தருகிறது.
4. எனவே, இத்தொடர் வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை எனப்படும்.

இயல் 1 | **3. தொகாநிலைத்தொடர்** | இலக்கணப்பகுதி

## அ) புறவயவினாக்கள்

**1. பொருத்துக.** **விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. வினைமுற்றுத்தொடர் | - உடைந்த நாற்காலி | - **வந்தான் இராமன்** |
| 2. விளித்தொடர் | - வந்து நின்றான் | - **கண்ணா வா** |
| 3. பெயரெச்சத்தொடர் | - கண்ணா வா! | - **உடைந்த நாற்காலி** |
| 4. வினையெச்சத்தொடர் | - வந்தான் இராமன் | - **வந்து நின்றான்** |

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. மரக்கிளை ------------- என முறிந்தது. — **1. மடமட**
2. தங்கம் ------------- என மின்னுகிறது. — **2. பளபள**
3. வா வா வா என்பது --------------- ஆகும். — **3. அடுக்குத்தொடர்**

**3. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. மற்றுப்பிற என்னும் தொடரில் ‘மற்று’ என்பது ---------------- — **1. இடைச்சொல்**
   அ) உரிச்சொல் ஆ) இடைச்சொல் இ) பெயர்ச்சொல்
2. சாலப் பசித்தது என்பது ------------------ தொடர். — **2. உரிச்சொல்**
   அ) இடைச்சொல் ஆ) உரிச்சொல் இ) வினைச்சொல்
3. கூடிப் பேசினர் என்னும் தொடர் ---------------- ஆகும். — **3. வினையெச்சத்தொடர்**
   அ) வினைமுற்றுத்தொடர் ஆ) பெயரெச்சத்தொடர் இ) வினையெச்சத்தொடர்

## குறுவினாக்கள்

**1. தொகாநிலைத்தொடர் என்றால் என்ன?**

**தொகாநிலைத்தொடர் :-**

இரண்டு சொற்கள் தொடரும் போது இடையில் பிறசொல்லோ, உருபோ மறையாது பொருளை உணர்த்துவது ‘தொகாநிலைத்தொடர்’ எனப்படும்.

**2. அடுக்குத்தொடர் என்றால் என்ன? சான்று தருக.**

**அடுக்குத்தொடர் :-**

1. ஒரு சொல் இரண்டு, மூன்று, நான்கு, முறை அடுக்கி வருவது அடுக்குத்தொடர் எனப்படும்.
2. விரைவு, வெகுளி, மகிழ்ச்சி, அச்சம், துன்பம் முதலிய பொருள்களை உணர்த்துவதற்காகவும், அசைநிலை, பொருள் நிலை, செய்யுளில் இசை நிறைவு ஆகிய பொருள்களில் வரும்.

**சான்று :**

வாழ்க! வாழ்க - மகிழ்ச்சி
தீ! தீ! தீ! - அச்சம்
ஓடு! ஓடு! ஓடு! - விரைவு
ஐயோ! ஐயோ! - துன்பம்

**3. அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளை எழுதுக.**

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| 1. சொற்கள் தனித்தனியே பிரிந்து நிற்கும் | சொற்கள் ஒன்றுபட்டு சேர்ந்து நிற்கும். |
| 2. பிரித்தால் ஒவ்வொரு சொல்லும் பொருள் தரும். | பிரித்தால் பொருள் தராது. |
| 3. இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வரும். | இஃது இரட்டைச்சொல்லாகவே வரும். |
| 4. விரைவு, அச்சம், மகிழ்ச்சி, வெகுளி முதலிய பொருள்கள் பற்றி வரும். | வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப்பொருள் உணர்த்தி வரும். |

**இயல் 1** | **வழக்குச் சொற்கள்** | **மொழித்திறன்பகுதி**

**1. உரிய எழுத்துவழக்குச்சொற்களை அறிவோம்.**

| பேச்சுவழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| 1. கோர்த்து | - கோத்து |
| 2. சுவற்றில் | - சுவரில் |
| 3. நாட்கள் | - நாள்கள் |
| 4. மனதில் | - மனத்தில் |
| 5. பதட்டம் | - பதற்றம் |
| 6. சிலவு | - செலவு |
| 7. அருகாமையில் | - அருகில் |

**2. பிழைநீக்கி எழுதும் திறன்:**

**கீழுள்ள பகுதியைப் படித்துப் பிழைகளை பட்டியலிடுக.**

ஓர் மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்க்கொண்டார். அந்த சுற்றுலாவில் அவர் தான் கண்டதை கூறவே, ஒரு கூட்டத்தைக் கூட்டினார்.

**விடை:** **ஒரு** மாவட்டத்தில் **ஓர்** அமைச்சர் **அவருடைய** மகனோடு சுற்றுலா **மேற்கொண்டார்**. **அந்தச் சுற்றுலாவில் அவர்தாம் கண்டதனைக் கூறவே** ஒரு கூட்டத்தைக் கூட்டினார்.

**பயிற்சி:** இன்றைய தினம் புதன்கிழமை, கண்ணன் நேற்று என்னிடம் வாங்கிச் சென்ற ஐநூறு ரூபாயைத் திருப்பித் தருவதாகச் சொன்னான். ஆனால், நாட்கள் கடந்தது. அவன் வரவில்லை. நான் ஏமாந்து போனேன்.

**விடை:** : இன்றைய தினம் புதன்கிழமை, கண்ணன் நேற்று என்னிடம் வாங்கிச் சென்ற **ஐந்நூறு** ரூபாயைத் திருப்பித் தருவதாகச் சொன்னான். ஆனால், **நாள்கள் கடந்தன**. அவன் வரவில்லை. நான் ஏமாந்து போனேன்.

**3. அரபு எண்களுக்கு ஏற்ற தமிழெண்களை எழுதுக.**

1. 10 - **க0** 2. 20 - **உ0** 3. 19 - **கசு** 4. 15 - **கரு**

**4. கட்டுரை பயிற்சி: காகிதம் தன்வரலாறு கூறுதல்**

1. முன்னுரை
2. காகிதம் கண்டுபிடிப்பு
3. காகிதம் உருவாக்கும் முறை
4. காகிதம் புத்தக வடிவம் பெறுதல்
5. காகிதம் பயன்படும் இடங்கள்
6. முடிவுரை

**1. முன்னுரை:**

தற்போது மிகவும் இன்றியமையாத தேவையாக மாறிவிட்ட நான்தான் காகிதம் பேசுகிறேன். என்னை தூயத்தமிழில் தாள் என்றும் ஆங்கிலத்தில் பேப்பர் என்றும் அழைப்பார்கள். இன்றைய 21ஆம் நூற்றாண்டில் நான் மிகவும் முக்கிய பொருளாய்ப் பயன்படுகின்றேன்.

**2. காகிதம் கண்டுபிடிப்பு:**

எகிப்தியர்கள் 5000ஆண்டுகளுக்கு முன்னர் பேபரஸ் என்னும் மரத்தின் பட்டையைப் பயன்படுத்தி எனக்கு முதன்முதலாய் வடிவம் கொடுத்தார்கள். பின்னர் சீனர்கள் என்னை உருவாக்கினார்கள்.

**3. காகிதம் உருவாக்கும் முறை**

என்னை உருவாக்க மூங்கில் மரப்பட்டைகளை ஒரு தண்ணீர்த்தொட்டியில் ஊற வைப்பார்கள். அதிலிருந்து ஒரு பசை உருவாகும். மேற்பரப்பில் உள்ள பசை போன்ற பொருளை துணிமேல் ஊற்றி வடிகட்டுவர். பின்னர் அப்பசையை பிரித்தெடுத்து அதிலுள்ள ஈரப்பசையை நீக்கிப் பதப்படுத்துவர். அப்போது நான் காகிதமாய் உருவாகிறேன்.

**4. காகிதம் புத்தக வடிவம் பெறுதல்:**

கூடன்பர்க் என்பவர் அச்சுக்கலையை கண்டுபிடித்தார். அதன்பிறகு தான் தாள் வடிவில் இருந்த நான் புத்தக வடிவம் பெறுகிறேன். தற்போது பல வண்ணங்களிலும், வழவழப்பான அட்டைகளிலும் என்னை உருவாக்கியிருக்கிறார்கள்.

5. **காகிதம் பயன்படும் இடங்கள்:**
   பள்ளிகள், அலுவலகங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட ஏராளமான இடங்களில் நான் பயன்படுகின்றேன். ரூபாய் நோட்டுகள், பத்திரங்கள், அரசு ஆணைகள் போன்ற ஆவணங்கள் என்னை சமுதாயத்தில் மதிப்பு மிக்கவனாக மாற்றுகின்றன.
6. **முடிவுரை:**
   நான் தற்போது அனைவருக்கும் இன்றியமையாத பொருளாக மாறிவிட்டேன். எனவே தேவைக்கு தகுந்தாற்போல் என்னைப் பயன்படுத்துங்கள். நான் அனைவருக்கும் பயன்படுவது போல் நீங்களும் நம் நாட்டுக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்து பயன்பட வேண்டும்.

**5. பண்பு:**

1. பூங்குழலியின் பண்பை நீ ஏற்றுக்கொள்கிறாயா? **ஆம்.**
2. உங்கள் வீட்டிற்கு யாராவது வந்தால் எவ்வாறு வரவேற்பாய்?
   **முகம் மலர வரவேற்பேன்.மேலும் வீட்டிற்கு வந்தவர்க்குப் பருக நீர் தருவேன்.**
3. பூங்குழலியைப்போல நீ யாரையாவது பார்த்ததுண்டா?
   **பூங்குழலியைப்போல பண்புடையவள் என் தோழி கார்முகில்.**
4. பூங்குழலியைப்போல நீயும் எல்லாரிடமும் பழகுகிறாயா? **ஆம் பழகுகிறேன்.**

## வளரறி செயல்பாடுகள்

**6. விளம்பரங்கள் அறிவிப்புகளைப் புரிந்து கொண்டு விடையளித்தல்:**

**வினாக்கள்:**

1. இவ்விளம்பரம் எதனைப் பற்றியது?
   **நவராத்திரி கொலு பொம்மை விற்பனைக்கண்காட்சி**
2. இவ்விளம்பரத்தில் விற்பனை செய்யப்படும் பொருள்கள் யாவை?
   **கொல்கத்தா, கோலாப்பூர் பொம்மைகள்**
3. விற்பனை எங்கு நடைபெறுகிறது?
   **33, அரங்கநாதன் தெரு, தி நகர், சென்னை.**
4. விற்பனைச்செய்யப்படும் கால அளவைக் குறிப்பிடுக.
   **காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை**
5. இவ்விளம்பரத்தை வெளியிடுவோர் யார்?
   **சென்னை சர்வோதய சங்கம் காதி கிராமோத்யாக் பவன்**




**7. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

வீடு தோறும் கரையின் விளக்கம்
　　வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
　　நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாதடிதொருரைத்
　　தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
　　கேண்மை கொள்ள வழியிலை கண்டீர்.

**வினாக்கள்**

1. வீடுதோறும் என்ன தேவை?
   **வீடுதோறும் கலையின் விளக்கம் தேவை.**
2. வீதிதோறும் எத்தனை பள்ளிகள் அமைதல் வேண்டும்?
   **வீதிதோறும் ஒன்று அல்லது இரண்டு பள்ளிகள் அமைதல் வேண்டும்.**
3. நாடு முற்றிலும் உள்ளன யாவை?
   **நாடு முற்றிலும் உள்ளவை ஊர்கள்.**
4. கேடு தீர்ப்பவள் யார்?
   **கேடு தீர்ப்பவள் அமுதமென்னும் அன்னையாவாள்.**
5. இப்பாடலுக்கு ஏற்ற தலைப்பு?
   **முன்னேற்றம் வேண்டும்**

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

**அ) பொருள் தருக.** **5x1=5**

1. நுகர் - ................ **உண்ணுதல்**
2. கனி - ................ **பழம்**
3. கரம் - ................ **கை**
4. தாள்மலர் - ................ **பாதம்**
5. கருணை - ................ **இரக்கம்**

**ஆ. நிரப்புக.** **5x1=5**

1. விவேகசிந்தாமணிப் பாடலில் நாவற்பழத்திற்கு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ள உயிரி.............
   **விடை : வண்டு**
2. அசலாம்பிகை அம்மையார் திண்டிவனத்திற்கு அருகிலுள்ள ......... என்னுமிடத்தில் பிறந்தார்.
   **விடை : இரட்டணை**
3. பாரதத்தாய் பாடலில் குறிப்பிடப்படும் தாய்மையுள்ளம் கொண்டவர்...........
   **விடை : காந்தியடிகள்**
4. இரண்டாம் வேற்றுமைக்குரிய உருபு ...........
   **விடை : ஐ**
5. பாம்பு பாம்பு என்பது ............. தொடர்
   **விடை : அடுக்குத்தொடர்**

## இயல் 2 — 1. திருமந்திரம் — செய்யுட்பகுதி

**மனப்பாடப்பகுதி**

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.
- திருமூலர்

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக.** (விடைகள்)

1. திடம் - -------------- — **1. உறுதி**
2. உபாயம் - --------------- — **2. வழிவகை**
3. மெய்ஞ்ஞானம் - --------------- — **3. மெய்யறிவு**

**2. பிரித்து எழுதுக.**

1. மெய்ஞ்ஞானம் - --------------- — **1. மெய் + ஞானம்**
2. உடம்பார் - --------------- — **2. உடம்பு + ஆர்**

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. திருமந்திரத்தை இயற்றியவர் --------------- — **1. திருமூலர்**
2. திருமந்திரத்தில் புகழ்பெற்ற தொடர் ------------- — **2. ஒன்றே குலம் ஒருவனே தேவன்**

### ஆ) குறுவினாக்கள்

**1. திருமந்திரம் குறிப்பு எழுதுக.**

1. சைவத் திருமுறைகளில் பத்தாவது திருமுறையாய் அமைந்துள்ளது திருமந்திரம்.
2. இந்நூல் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது.
3. இந்நூலுக்கு 'தமிழ் மூவாயிரம்' என்னும் வேறு பெயரும் உண்டு.
4. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பது இந்நூலின் புகழ்பெற்ற தொடராகும்.

**2. உயிர் அழியக் காரணம் என்ன?**

நோய் முதலிய காரணங்களால் உடம்பு அழியுமாயின் உயிரும் அழியும்.

### இ) சிறுவினாக்கள்

**1. திருமூலர் - குறிப்பு எழுதுக.**

1. திருமூலர் முதல் சித்தர் என்று போற்றப்படுபவர்.
2. இவர் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர்.
3. மூலன் என்னும் பெயர், திரு என்னும் பெயரடை பெற்று, அத்துடன் அர் என்னும் மரியாதைப்பன்மையும் பெற்று, திருமூலர் என ஆயிற்று.
4. இவர் ஐந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர்.

**2. அறிவு வளர திருமூலர் கூறும் வழிவகை யாது?**

1. நோய் முதலியவற்றால் உடல் அழிந்தால் உயிரும் நீங்கும்.
2. உடல் வலிமை குன்றியோர் உறுதிதரும் மெய்யறிவை அடைய முடியாது.
3. மெய்யறிவு வளர உடம்பினைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

## இயல் 2 — 2. தேம்பாவணி — செய்யுட்பகுதி

**மனப்பாடப்பகுதி**

நகைசெய் தன்மையி னம்பெழீ இத் தாய்துகள்
பகைசெய் நெஞ்சமும் பற்றலு மொன்றுற
முகைசெய் மேனி தழுவிமுத் திட்டலுங்
குகைசெய் யின்பெழக் கோலமிட் டொத்ததே
- வீரமாமுனிவர்

## அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக.**

1. நகை - -------------
2. முகை - -------------
3. மேனி - -------------

**விடைகள்**

1. **புன்னகை**
2. **மொட்டு**
3. **உடல்**

**2. பிரித்து எழுதுக.**

1. ஒன்றுற - -----------
2. முத்திடல் - -----------
3. கோலமிட்டு - -------------

1. **ஒன்று + உற**
2. **முத்து + இடல்**
3. **கோலம் + இட்டு**

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தேம்பாவணி நூலின் ஆசிரியர் -------------------
2. வீரமாமுனிவரின் இயற்பெயர் ---------------
3. வீரமாமுனிவர் ------------ நாட்டைச் சார்ந்தவர்.

1. **வீரமாமுனிவர்**
2. **கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி**
3. **இத்தாலி**

## ஆ) குறுவினாக்கள்

**1. தேம்பாவணி - குறிப்பு எழுதுக.**

1. தேம்பாவணி – தேம்பா + அணி = வாடாத பூமாலை போன்ற பாமாலை.
2. இந்நூல், இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது.
3. இந்நூல் கிறித்தவச் சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என அழைக்கப்படுகிறது.
4. இது மூன்று காண்டங்களும், முப்பத்தாறு படலங்களும் உள்ளன. மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து பாடல்கள் உள்ளன.

**2. வீரமாமுனிவர் அறிந்த மொழிகள் யாவை?**

**வீரமாமுனிவர் அறிந்த மொழிகள் :-**

இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமற்கிருதம் ஆகியனவாகும்.

**3. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் யாவை?**

**வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் :-**

ஞானோபதேசம், பரமார்த்த குருகதை, சதுரகராதி, திருக்காவலூர்க் கலம்பகம், தொன்னூல் விளக்கம் முதலிய நூல்களை இயற்றினார்.

## இ) சிறுவினாக்கள்

**1. வீரமாமுனிவர் - குறிப்பு எழுதுக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | வீரமாமுனிவர் |
| இயற்பெயர் | : | கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி |
| பெற்றோர் | : | கொண்டல் போபெஸ்கி – எலிசபெத் |
| பிறந்த ஊர் | : | இத்தாலி நாட்டில் காஸ்திக்கிளியோன் |
| அறிந்த மொழிகள் | : | இத்தாலியம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமற்கிருதம் |
| சிறப்பு | : | முப்பதாவது வயதில் தமிழ் பயின்று காப்பியம் படைத்தவர். |
| காலம் | : | 1680 – 1747 |
| இயற்றிய நூல்கள் | : | ஞானோபதேசம், பரமார்த்த குருகதை, சதுரகராதி, திருக்காவலூர்க் கலம்பகம், தொன்னூல் விளக்கம். |

**2. தாய் மரியாள், குழந்தை இயேசுவிடம் காட்டிய அன்பு, எதனைப் போன்று இருந்தது?**

1. குழந்தை இயேசு புன்னகை பூத்தார். அதனைக் கண்ட தாயாகிய மரியாள் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கிஎழுந்தது.
2. தீவினையைப் பகைத்த தன் மனத்தில் ஆர்வமும் மகிழ்ச்சியும் கலந்ததும், பூப்போன்ற மேனியுடைய திருமகனை அணைத்து முத்தமிட்டாள்.
3. இக்காட்சியானது அன்பு மேலிடக் குகையொன்று குனிந்து கோலமிட்டது போலிருந்தது.

## இயல் 2 | 3. நாடகக் கலை | உரைநடைப்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. பிரித்து எழுதுக.**

| | | விடைகள் |
|---|---|---|
| 1. அரங்கேற்றம் | - ---------------- | **1. அரங்கு + ஏற்றம்** |
| 2. கதையழகு | - ---------------- | **2. கதை + அழகு** |
| 3. ஏட்டிலக்கியம் | - ---------------- | **3. ஏடு + இலக்கியம்** |
| 4. நாடகக்கலை | - --------------- | **4. நாடகம் + கலை** |
| 5. நூற்றாண்டு | - ---------------- | **5. நூறு + ஆண்டு** |

**2. சேர்த்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. தமிழ் + பண்பு | - ------------- | **1. தமிழ்ப்பண்பு** |
| 2. பெருமை + ஆசிரியர் | - ------------- | **2. பேராசிரியர்** |
| 3. எட்டு + தொகை | - ------------ | **3. எட்டுத்தொகை** |
| 4. சிறப்பு + இடம் | - ------------ | **4. சிறப்பிடம்** |
| 5. நிழல் + பாவை | - ------------ | **5. நிழற்பாவை** |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

| | |
|---|---|
| 1. ‘நாடகமேத்தும் நாடகக்கணிகை’ எனக் குறிப்பிடப்படுபவர் ---------- | **1. மாதவி** |
| 2. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர் -------------- | **2. அடியார்க்கு நல்லார்** |
| 3. மறைமலையடிகள் எழுதிய நாடகம் ------------------ | **3. சாகுந்தலம்** |

### ஆ) குறுவினாக்கள்

**1. தமிழின் முப்பெரும் பாகுபாடுகள் யாவை?**
**தமிழின் முப்பெரும் பாகுபாடுகள் :-**

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பன தமிழின் முப்பெரும் பாகுபாடுகள் ஆகும்.

**2. நாடகம் - குறிப்பு எழுதுக.**

1. நாடகம் - நாடு + அகம் எனப் பிரியும். நாட்டை அகத்தில் கொண்டது நாடகம்.
2. நாட்டின் கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகியவற்றைத் தன் அகத்தே காட்டுவதால் நாடகம் எனப் பெயர் பெற்றது.
3. நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி ஆகும்.

**3. நாடகம் தோன்ற அடிப்படையாக அமைந்தது எது?**

1. நாடகம் தோற்றமானது **‘போல செய்தல்’** என்னும் பண்பு அடிப்படையில் அமைந்ததைக் காணலாம்.
2. பிறர் செய்வதைப் போலத் தாமும் செய்து பார்க்கவேண்டும் என்ற மனித உணர்ச்சிதான் நாடகம் தோன்றக் காரணமானது.

**4. நாடகத்திற்கு இலக்கணம் வகுத்த நூல்கள் யாவை?**

நாடகத்திற்கு இலக்கணம் வகுத்த பழந்தமிழ் நூல்களில் முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், விளக்கத்தார் கூத்து, குணநூல், கூத்துநூல் முதலியன ஆகும்.

**5. நொண்டி நாடகம் - குறிப்பு எழுதுக.**

1. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நொண்டி நாடகங்கள் தோன்றின.
2. செல்வக்குடியில் பிறந்த ஒருவன், ஒழுக்கங்கெட்டு, நோயும் வறுமையும் உற்று இறுதியில் திருந்தி வாழ்வதாக இவ்வகை நாடகங்கள் அமைந்தன.

### இ) சிறுவினாக்கள்

**1. சிலப்பதிகாரத்தில் நாடகம் பற்றிய குறிப்புகளைப் புலப்படுத்துக.**
**சிலப்பதிகாரத்தில் நாடகம் பற்றிய குறிப்புகள் :-**

1. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், நாட்டியமாடும் மாதவியை ‘**நாடகமேத்தும் நாடகக்கணிகை**’ என்று குறிப்பிடுகிறார்.
2. தனிப்பாடல்களுக்கு மெய்ப்பாடு தோன்ற ஆடுவதை **‘நாட்டியம்’** எனவும், ஒரு கதையைத் தழுவி வேடம்புனைந்து ஆடுவதை **‘நாடகம்’** எனக் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

3. **‘நாட்டியம்’, ‘நாடகம்’** இரண்டிற்கும் பொதுவாக **கூத்து** என்ற சொல்லே வழக்கில் இருந்தது.
4. சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், கூத்து வகைகளைப் பற்றியும் நாடக நூல்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

**2. ‘நாடகவியல்’ குறிப்பு எழுதுக.**

**நாடகவியல் :-**

1. பரிதிமாற்கலைஞர் நாடகவியல் என்னும் நூலினைச் செய்யுள் வடிவில் இயற்றினார்
2. இந்நூலில் நாடகம், அதன் விளக்கம், வகைகள், நாடகம் எழுதப்பட வேண்டிய முறைகள், நடிப்புக்குரிய இலக்கணம், நடிப்பவர்களுக்குரிய இலக்கணம் போன்றவற்றை இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**3. ‘மனோன்மணியம்’ குறிப்பு எழுதுக.**

**மனோன்மணியம் :-**

1. மனோன்மணியம் என்னும் நாடகக் காப்பியத்தைக் **கி.பி.1891** ஆம் ஆண்டில், பேராசிரியர் சுந்தரனார் வெளியிட்டார்.
2. இந்நூல் **‘லார்ட் லிட்டன்’** எழுதிய மறைவழி எனும் ஆங்கிலக் கதையைத் தழுவியது.
3. ஆங்கிலக் கதையைத் தழுவியதாயிருந்தாலும் வடிவத்தாலும், பாத்திர அமைப்பாலும், சூழலாலும் தமிழ்ப்பணியில் ஓங்கியிருந்தது.

**4. விடுதலைப் போராட்டக் காலத்தில் தோன்றிய நாடகங்கள் யாவை?**

1. நம் நாட்டின் விடுதலைப் போராட்டக் காலத்தில் பல்வேறு தேசிய நாடகங்கள் அரங்கேற்றப்பட்டது.
2. தமிழ்நாட்டில் முதன் முதலாக நடத்தப்பட்ட ‘கதரின் வெற்றி’ தேசிய சமுதாய நாடகமாகும்.
3. இந்நாடகங்களைத் தொடர்ந்து தேசியக்கொடி, தேசபக்தி முதலிய நாடகங்கள் நடத்தப்பட்டன.
4. நாடக மேடைகளில் தேசியப்பாடல்களும் முழங்கப்பட்டன.

**5. நாடகத்தின் வாயிலாக நாம் அறிந்து கொள்வன யாவை?**

**நாடகத்தின் வாயிலாக அறிந்து கொள்வன :-**

உயிர்களிடத்தில் அன்பு, உறுதியான நெஞ்சு, தெய்வபக்தி, உயர்ந்த எண்ணங்கள், ஆகியவற்றை நாடகத்தின் வாயிலாய் நாம் அறிந்து கொள்கிறோம்

## ஈ) நெடுவினா

**1. பம்மல் சம்பந்தனார் நாடகக்கலைக்கு ஆற்றிய தொண்டினை விவரித்து எழுதுக.**

**பம்மல் சம்பந்தனார் நாடகக்கலைக்கு ஆற்றிய தொண்டு :-**

1. **‘தமிழ் நாடகத் தந்தை’** என்று போற்றப்பட்டவர் **பம்மல் சம்பந்தனார்** ஆவார்.
2. பம்மல் சம்பந்தனார் தொண்ணூறுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.
3. சேக்சுபியரின் ஆங்கில நாடகங்களை மொழிபெயர்த்துள்ளார்.
4. தமிழ் நாடக மேடையில் இவரது ‘மனோகரன்’ என்னும் நாடகம் எழுபது ஆண்டுகளாய்ப் புகழ்பெற்று விளங்கியது.

**நாடகக்கலைக்குப் பயன்படும் நூல்கள் :-**

5. தம் நாடக அனுபவங்களையெல்லாம் ‘நாடகமேடை நினைவுகள்’ என்னும் தலைப்பில் எழுதியுள்ளார்.
6. ‘நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி?’ என்னும் தலைப்பில் நாடகத்துறைக்குப் பயன்படும் வகையில் நூல்களை எழுதியுள்ளார்.

**2. நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.**

**1. நாடகம் :-**

1. நாடகம் - நாடு + அகம் எனப் பிரியும். நாட்டை அகத்தில் கொண்டது நாடகம்.
2. நாட்டின் கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகியவற்றை தன் அகத்தே காட்டுவதால் நாடகம் எனப் பெயர் பெற்றது. இதனை **‘கூத்துக்கலை’** என்னும் பெயர் உண்டு.
3. நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி ஆகும்.

**2. நாடகத்தின் தோற்றம் :-**

1. தமிழின் தொன்மையான கலை வடிவம் நாடகம் ஆகும்.
2. நாடகம் தோற்றமானது **‘போல செய்தல்’** என்னும் பண்பு அடிப்படையில் அமைந்ததைக் காணலாம்.
3. பிறர் செய்வதைப் போலத் தாமும் செய்து பார்க்கவேண்டும் என்ற மனித உணர்ச்சிதான் நாடகம் தோன்றக் காரணமானது.

3. **பாவைக்கூத்தின் வளர்ச்சி :-**

1. பண்டைய மரப்பாவைக்கூத்து பொம்மலாட்டமாக வளர்ச்சி அடைந்தது.
2. அதன் பின்னர், தோல்பாவைக் கூத்து, நிழற்பாவைக் கூத்து ஆகியன முறையே பாவைக்கூத்தின் வளர்ச்சி நிலைகளாக மக்களிடையே வழக்கிலிருந்தன.

4. **நாடகத்தின் வளர்ச்சி :-**
   1. உயிரற்ற பொருள்களை வைத்து விளையாடிய விளையாட்டு படிப்படியாக வளர்ச்சி அடைந்தது.
   2. அதன் வளர்ச்சி உயிருள்ள மனிதர்களையே வேடம் புனையச்செய்து ஆடிப்பாடி நடிக்க வைத்தது.
   3. பாவைக்கூத்து முதல் பல்வேறு நிலைகளில் வளர்ச்சி அடைந்த நாடகம் நாட்டியமாகி, நாட்டிய நாடகமாகி புதிய நாடக உலகில் அடியெடுத்து வைத்துள்ளது.

## இயல் 2 — 4. கண் திறந்தது — துணைப்பாடப்பகுதி

### நெடுவினாக்கள்

**1. 'கண்திறந்தது' நாடகத்தின் கதையைச் சுருக்கி எழுதுக.**

1. முன்னுரை
2. கவிதா பள்ளிக்கு வரவில்லை
3. கவிதாவின் வருத்தம்
4. பள்ளிக்கு வர இயலாமைக்கானக் காரணம்
5. தோழிகளின் பாசம்
6. கவிதா அம்மாவின் விளக்கம்
7. கல்வியால் உயர்ந்த பெண்கள்
8. தமிழ் ஆசிரியரின் எதிர்பார்ப்பு
9. ஏழைகளுக்கு அரசின் சலுகைகள்
10. கவிதாவின் பெற்றோர் மனந்திரும்பினர்
11. முடிவுரை.

**1. முன்னுரை :-**

'கண்திறந்தது' என்ற இக்கதையின் வாயிலாகப் பெண்கல்வி பெறுவது ஒவ்வொருவரின் கடமை என விளக்குகிறது. "பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படா" என்னும் பெரியாரின் வாய்மொழிக்கேற்ப இக்கதையானது அமைந்துள்ளது.

**2. கவிதா பள்ளிக்கு வரவில்லை :-**

ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் கவிதா என்னும் மாணவி பள்ளி திறந்தும் பத்து நாளாகியும் அவள் பள்ளிக்குச் செல்லவில்லை. அவளைக் காண்பதற்குப் பள்ளித்தோழிகள் பேகம், மேரி ஆகிய இருவரும் அவள் வீட்டிற்கு வருகிறார்கள்.

**3. கவிதாவின் வருத்தம் :-**

கவிதாவிடம் தோழிகள், பள்ளிக்கூடம் திறந்து பத்து நாளுக்கு மேலாகிவிட்டது. பாடங்கள் நிறைய நடத்திவிட்டார்கள், தெரியுமா? எனக் கேட்டார்கள்.

தெரியும், மேரி. ஆனால் நான் இனிமேல் பள்ளிக்கு வர வாய்ப்பே இல்லை. உங்களுடன் நானும் பத்தாம் வகுப்பு படிக்க வேண்டியவள். என் நிலைமை இப்படி ஆகிவிட்டதே! என வருந்தினாள்.

**4. பள்ளிக்கு வர இயலாமைக்கான காரணம் :-**

கவிதா, தான் இன்னும் ஒரு வாரத்தில் பெற்றோருடன் தன் ஊருக்குப் போகவிருப்பதாய்க் கூறினாள். கவிதாவின் தாய், தங்களுக்குப் போதிய வருமானம் இல்லாததால் உடுப்பதோ கந்தலாடை, உண்பதோ ஒருவேளை சோறு, ஏழையான எங்களுக்கு எதற்குப் படிப்பு? ஆதலால் பிறந்த ஊருக்குப் போவதாய்க் கூறினாள்.

**5. தோழிகளின் பாசம் :-**

கவிதாவின் அம்மா கூறியதைக் கேட்டதும், கவிதாவின் தோழி பேகம், "எங்கள் வீட்டில் கவிதா தங்கிப் படிக்கட்டும். நாங்கள் கவனமாய்ப் பார்த்துக் கொள்வோம்," என்றாள். அதனைக் கேட்ட கவிதாவின் அம்மா, "அதெல்லாம் நடக்கிற காரியமா!" நீங்க சின்னப்பிள்ளைகள் உங்களுக்கு விவரம் பத்தாதும்மா என்கிறாள்.

**6. கவிதா அம்மாவின் விளக்கம் :-**

கவிதாவின் தமிழ் ஆசிரியர், கவிதாவிடம் மறுநாள் பள்ளிக்கு வரச்சொல்கிறார். கவிதாவின்அம்மாவோ, கவிதாவை மேற்கொண்டு படிக்க வைக்க வசதியில்லை என்றும், "பொண்ணுங்க படித்து என்ன செய்ய? பெட்டைக்கோழி கூவிப் பொழுது விடியுமா? பெண்புத்தி பின்புத்தி தானேங்க ஐயா? என்றும் கூறினாள்.

**7. கல்வியால் உயர்ந்த பெண்கள் :-**

கவிதாவின் அம்மா கூறியதைக் கேட்ட தமிழ் ஐயா, "அம்மா, பெண்ணோ ஆணோ கல்வியால் மட்டுமே உயரமுடியும். அந்தக்கால ஔவையாரிலிருந்து இந்தக்கால இந்திரா காந்தி, கல்பனா சாவ்லா போன்ற மாதரசிகள் வரை கல்வியால் உயர்ந்த மேதைகள். அம்மா! படித்தால் கவிதாவும் அப்படிபட்ட சாதனையாளர்களின் வரிசையில் வரமுடியும் என்றார். அப்போது கவிதாவின் அப்பா அங்கு வந்து, "கவிதாவைப் படிக்க வைக்க வசதியில்லை" என்றார்.

**8. தமிழ் ஆசிரியரின் எதிர்பார்ப்பு :-**

தமிழ் ஐயா, கவிதாவின் பெற்றோர்களிடம், உங்கள் மகள் கவிதா ஒன்பதாம் வகுப்பு இறுதித்தேர்வில் பள்ளியில் முதல் மாணவியாகத் தேர்வு பெற்றிருக்கிறாா். பத்தாம் வகுப்பில் மாநிலத்திலேயே முதல் மாணவியாக அவள் உறுதியாக வருவாள் என்றாா்.

**9. ஏழைகளுக்கு அரசின் சலுகைகள் :-**

தமிழ் ஐயா, "அம்மா, வசதிபடைத்தவர்கள் தான் படிக்கவைக்க முடியும் என்பதெல்லாம் அந்தக்காலம்! உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். இலவசச் சீருடை, பாடநூல்கள், நோட்டுப்புத்தகங்கள், மதிய உணவு, இலவசப் பேருந்து வசதி, மிதிவண்டி எனப் பல சலுகைகள் இன்று உள்ளன" என்றும், "கவிதாவின் திறமைக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது" என்றும் கூறினாா்.

**10. கவிதாவின் பெற்றோா் மனந்திரும்பினா் :-**

கவிதாவின் தந்தை, தமிழ் ஐயாவிடம், "ஏழைமக்களுக்கு இவ்வளவு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தாங்கள் கூறிய பிறகுதான் தெரிந்துகொண்டேன். என் மகள் நாளை முதல் பள்ளிக்கு வருவாள்," என்று கூறினாா். அவள் அம்மாவும் "உங்கள் விருப்பப்படி என் மகள் படித்துப் பெரிய ஆளாய் வரட்டும்" என்றாள்.

**11. முடிவுரை :-**

இக்கதையின் மூலம் "ஆண் ஒருவன் கல்வி கற்றால் அ∴து ஒருவன் மட்டும் கற்கும் கல்வி. பெண் ஒருத்தி கல்வி கற்றால், அவளைச் சாா்ந்த குடும்பம் முழுவதுக்குமே அவள் ஒளி விளக்காய் திகழ்வாள், என்பதை இக்கதையின் வாயிலாக அறியலாம்.

## இயல் 2 — 5. ஆகுபெயா் — இலக்கணப்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஊா் உறங்கியது என்பது ------------- ஆகுபெயா்.
2. நீலம் சூடினாள் ------------ ஆகுபெயா்.

**விடைகள்**
1. இட
2. பண்பு

**2. உரிய சொல்லைத் தோ்ந்தெழுதுக.**

1. வறுவல் தின்றான் என்பது
   அ) முதலாகு பெயா் ஆ) இடவாகுபெயா் இ) தொழிலாகுபெயா்
2. சித்திரை வந்தாள் என்பது
   அ) சினையாகு பெயா் ஆ) காலவாகு பெயா் இ) தொழிலாகுபெயா்

**விடைகள்**
1. தொழிலாகுபெயா்
2. காலவாகுபெயா்

### ஆ) குறுவினாக்கள்

**1. ஆகுபெயா் என்றால் என்ன? சான்று தருக.**

**ஆகுபெயா் :-** ஒன்றன் இயற்பெயா் தன்னைக் குறிக்காமல், தன்னோடு தொடா்புடைய வேறொரு பொருளுக்குத் தொன்றுதொட்டுப் பெயராகி வருவது 'ஆகுபெயா்' ஆகும்.

**சான்று** : மயில் ஆடினாள்

**விளக்கம்** : 'மயில்' என்பது பறவையைக் குறிக்கவில்லை. 'ஆடினாள்' என்னும் குறிப்பால், மயில் போன்ற சாயலையுடைய பெண்ணுக்குப் பெயராய் நிற்கிறது.இதுவே ஆகுபெயராகும்.

**2. ஆகுபெயா் எத்தனை வகைப்படும்?**

ஆகுபெயா் பதினாறு வகைப்படும்.

**3. சினையாகு பெயா் சான்றுடன் விளக்குக.**

**சினையாகு பெயா் சான்று :** வெற்றிலை நட்டான்

**விளக்கம்** : இத்தொடரில் 'வெற்றிலை' என்பது சினையாகிய இலையைக் குறிக்காமல் அதன் முதல்பொருளாகிய கொடிக்குப் பெயராகி வருதலால் அ∴து சினையாகுபெயராகும்.

**4. தொழிலாகு பெயா் என்றால் என்ன? சான்று தருக.**

**தொழிலாகு பெயா் :-** ஒரு தொழின் பெயா் அத்தொழிலால் பெறப்படும் பொருளுக்குப் பெயராகி வருவது தொழிலாகுபெயராகும்.

**சான்று** : வறுவல் வைத்தனா்

**விளக்கம்** : 'வறுவல்' என்ற தொழிலைக் குறிக்காமல் அத்தொழிலினின்றும் கிடைத்த கிழங்கு வகைகளைக் குறிக்கின்றது. ஆகவே, இது தொழிலாகு பெயர் ஆகும்.

## இயல் 2 | 6. வழுக்கள் | மொழித்திறன்பகுதி

**1. கீழ்காணும் தொடர்களில் அமைந்துள்ள வழுக்களை நீக்கி எழுதுக.**

1. புலவர் வந்தார்கள்.
   **விடை: புலவர்கள் வந்தார்கள்.**
2. மயில் கூவ குயில் அகவியது.
   **விடை: மயில் அகவ குயில் கூவியது.**
3. தாமரை படம் வரைந்தான்.
   **விடை: தாமரை படம் வரைந்தாள்.**
4. யானைகள் வந்தது.
   **விடை: யானைகள் வந்தன.**
5. பெருமழை பெய்தமையால் மரங்கள் வீழ்ந்தது.
   **விடை: பெருமழை பெய்தமையால் மரங்கள் வீழ்ந்தன.**
6. வயலில் ஆட்டுக்கன்று மேய்கிறது.
   **விடை: வயலில் ஆட்டுக்குட்டி மேய்கிறது.**
7. பசு குட்டி போட்டது.
   **விடை: பசு கன்று ஈன்றது.**
8. மாட்டை லாயத்தில் கட்டு.
   **விடை: மாட்டை தொழுவத்தில் கட்டு.**
9. வெற்றிலைத் தோப்புக்குச் சென்று வெற்றிலை பறித்து வா.
   **விடை: வெற்றிலைத் தோட்டத்துக்குச் சென்று வெற்றிலை பறித்து வா.**
10. யானை முழங்கும்.
    **விடை: யானை பிளிறும்.**

**2. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. சிங்கம் கனைத்தது | - எண்வழு | - **மரபுவழு** |
| 2. கண்ணன் படித்தாள் | - காலவழு | - **திணைவழு** |
| 3. இன்று வருவான் | - திணைவழு | - **பால்வழு** |
| 4. கபிலன் பேசியது | - மரபுவழு | - **காலவழு** |
| 5. பறவைகள் பறந்தது | - பால்வழு | - **எண்வழு** |

**3. தமிழெண்களைக் கூட்டுக.**

| | | |
|---|---|---|
| 1. க0 + க | - ……….. | **விடை : கக** |
| 2. உ + கக | - ………. | **விடை : கங** |
| 3. க0 + க0 | - ………. | **விடை : உ0** |

**4. கட்டுரை பயிற்சி : நான் மருத்துவரானால்......**

மருத்துவம் என்பது சமுதாயம் நலம் பெறச்செய்யும் பணியாகும். நான் மருத்துவரானால் சமுதாய மக்களின் நல்வாழ்விற்காக முனைப்புடன் பணியாற்றுவேன். மேலும் நான் மருத்துவரானால் எவ்வாறெல்லாம் பணியாற்றுவேன் என உங்களிடம் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

நான் மருத்துவரானால் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக சிகிச்சையளிப்பேன். மேலும் நோய்த்தொற்று ஏற்படாதவாறு எவ்வாறு தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், வழிமுறைகளையும் அவர்கள் எளிதில் புரிந்து கடைப்பிடிக்கும் அளவிற்குக் கூறுவேன்.
நான் மருத்துவரானால் வருவாய் ஒன்றையே முதலாய்க் கொண்டு செயலாற்றாமல், மனித நேயத்துடன் பணியாற்றுவேன். எளிதில் பரவும் நோய்கள், பரவா நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவேன்.
தற்காலத்தில் டெங்கு உள்ளிட்ட பல மர்மக்காய்ச்சல் பரவி வருகின்றன. இதனைத் தடுக்க என்னாலான முயற்சிகள் எடுத்து செயல்படுத்துவேன்.

மருத்துவப்பணியை மக்களுக்குச் செய்யும் அறப்பணியாகச் செய்வேன். நோயாளிகளிடம் அன்பாகவும் ஆதரவாகவும் பழகி அவர்களின் நோய்த்துன்பத்தைப் போக்க உதவுவேன். அவர்களிடம் வெறுப்பையோ கோபத்தையோ காட்டாமல் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையுடன் பணியாற்றுவேன். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதை மனதிற்கொண்டு என்னாலான சேவைகளை மக்களுக்குத் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பேன்.

**5. பன்னிரு திருமுறைகளின் பெயர்களையும் அவற்றை எழுதியவர்களின் பெயர்களையும் தொகுத்தல்:**

1. முதல் திருமுறை
2. இரண்டாம் திருமுறை } - திருஞானசம்பந்தர்
3. மூன்றாம் திருமுறை

4. நான்காம் திருமுறை
5. ஐந்தாம் திருமுறை } - திருநாவுக்கரசர்
6. ஆறாம் திருமுறை

7. ஏழாம் திருமுறை - சுந்தரர்
8. எட்டாம் திருமுறை(திருவாசகம்) - மாணிக்கவாசகர்
9. ஒன்பதாம் திருமுறை - திருமாளிகைத்தேவர்
10. பத்தாம் திருமுறை(திருமந்திரம்) - திருமூலர்
11. பதினோராம் திருமுறை - நக்கீரதேவ நாயனார் முதலியோர்
12. பன்னிரண்டாம் திருமுறை - சேக்கிழார்

**6. படைப்பாற்றல்**

**அன்பு என்னும் சொல்லில் முடியும் பாடல் ஒன்றனை எழுதுக.**

இசையின் இனிமை! இயலின் பெருமை!
தசையும் தருகின்ற தன்மை! – திசையெங்கும்
போற்றிடும் தெய்வம்போல் நின்றுதவும் தன்மையின்
ஆற்றலே அன்னையின் அன்பு!!

**7. ஆகுபெயர்களை கண்டறிந்து எழுதுதல்.**

1. ஊரே மாறிவிட்டது - **இடவாகுபெயர்**
2. கீரை விதைத்திருக்கிறோம் - **முதலாகுபெயர்**
3. ரோசா நட்டுள்ளேன் - **சினையாகுபெயர்**
4. பட்டு அணிந்திருக்கிறீர்களே - **முதலாகுபெயர்**

**8. பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

பெண்கட்குக் கல்வி வேண்டும்
உலகினைப் பேணு தற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும்
கல்வியைப் பேணுதற்கே
கல்வியில்லாத பெண்கள்
களர்நிலம் அந்நிலத்தில்
புல்விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை.

**வினாக்கள் :**

1. யாருக்குக் கல்வி வேண்டும்? **பெண்களுக்குக் கல்வி வேண்டும்**
2. பெண்களுக்குக் கல்வி ஏன் வேண்டும்? **உலகினைப் பேணுதற்கே பெண்களுக்குக் கல்வி வேண்டும்**
3. கல்வியில்லாத பெண்கள் எதற்கு ஒப்பாவர்? **கல்வியில்லாத பெண்கள் களர்நிலத்திற்கு ஒப்பானவர்.**
4. களர்நிலத்தில் எது விளையும்? **களர்நிலத்தில் புல் விளையும்**
5. பாடலுக்கேற்ற தலைப்பு இடுக. **பெண்கல்வி**

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

**I. கீழ்க்காணும் வினாத்தொடரினைப் படித்து ஆம் இல்லை என விடை எழுதுக.** **5x1=5**

1. திருமந்திரம் சைவத் திருமுறைகளில் பத்தாவது திருமுறையா? **ஆம்**
2. சூசையப்பர் இயற்றிய நூல் தேம்பாவணியா? **இல்லை**
3. சங்கரதாசு சுவாமிகள் தமிழ்நாடகத் தலைமையாசிரியரா? **ஆம்**
4. மதங்கசூளாமணி நூலினை சுவாமி விபுலானந்தர் எழுதினாரா? **ஆம்**
5. வெற்றிலை நட்டான் என்பது சினையாகு பெயரா? **ஆம்**

**II.பொருந்தாதனவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1=5**

1. ஞானோபதேசம், திருமந்திரம், பரமார்த்த குரு கதை, தொன்னூல் விளக்கம்

    விடை: **திருமந்திரம்**

2. பம்மல் சம்பந்தனார், ஔவை சண்முகனார், சங்கரதாசு சுவாமிகள், பரிதிமாற்கலைஞர்

    விடை: **ஔவை சண்முகனார்**

3. செயிற்றியம், முறுவல், நன்னூல், சயந்தம்

    விடை: **நன்னூல்**

4. பவளக்கொடி, இலவகுசா, மனோகரன், பிரகலாதன்

    விடை: **மனோகரன்**

5. பொரியல், அவியல், சித்திரை, சுண்டல்

    விடை: **சித்திரை**

## இயல் 3 — 1. கம்ப இராமாயணம் — செய்யுட்பகுதி

### மனப்பாடப்பகுதி

தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணத் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே
- கம்பர்

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக.** — **விடைகள்**

1. தாது - ------------- — **1. மகரந்தம்**
2. பொய்கை - ------------- — **2. இயற்கையான நீர்நிலை**
3. சோலை - ------------- — **3. பூங்கா**
4. வனம் - --------------- — **4. காடு**
5. போது - ------------- — **5. மலர்**

**2. பிரித்து எழுதுக.**

1. சண்பகக்காடு - ---------------- — **1. சண்பகம் + காடு**
2. வனந்தொறும் - ---------------- — **2. வனம் + தொறும்**
3. போதவிழ் - ---------------- — **3. போது + அவிழ்**
4. உயிரென - ---------------- — **4. உயிர் + என**

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. கம்பர் பிறந்த ஊர் --------------- — **1. தேரழுந்தூர்**
2. கம்பரை ஆதரித்த வள்ளல் ------------- — **2. சடையப்ப வள்ளல்**
3. கம்பராமாயணத்தில் அமைந்துள்ள காண்டங்களின் எண்ணிக்கை ---- — **3. ஆறு**

### ஆ) குறுவினாக்கள்

**1. கம்பர் - குறிப்பு எழுதுக.**

1. கம்பர் நாகைமாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள தேரழுந்தூரில் பிறந்தார்.
2. வால்மீகி வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தமிழில் இயற்றியவர்.
3. இவரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல் ஆவார்.
4. இவரின் காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு ஆகும்.

**2. கம்பராமாயணம் - குறிப்பு எழுதுக.**

1. கம்பராமாயணம் ஆறு காண்டங்களை உடையது.
2. வடமொழியில் வழங்கிய இராம கதையைக் கம்பர் இராமகாதை எனப் பாடினார். அது கம்பராமாயணம் என வழங்கப்படுகிறது.
3. கம்பராமாயணம் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களையுடையது.

### சிறு வினாக்கள்

**1. சரயு நதி எவ்வாறு உலவியது எனக் கம்பர் குறிப்பிடுகிறார்?**

1. சரயு நதியானது மகரந்தப்பொடிகளை உதிர்க்கின்ற சோலைகள் தோறும் சென்று உலவியது.
2. சண்பக மரங்கள் நிறைந்த காடுதோறும் சென்று உலவியது.
3. தாமரைமலர்கள் மலர்ந்திருக்கும் குளங்களை நிரப்பியும் சென்று உலவியது.
4. புதிய மணம் வீசக்கூடிய குளந்தோறும் சென்று உலவியது.
5. குருக்கத்திக்கொடிகளை வேலிகளாய்க் கொண்ட பாக்குமரத் தோட்டந்தோறும் சென்று உலவியது.
6. வயல்களைச் செழிக்கச் செய்தும் பாய்ந்து சென்று உலவியது.

## இயல் 3 — 2. விழுதும் வேரும் — செய்யுட்பகுதி

**மனப்பாடப்பகுதி**

தூலம்போல் வளர்கி ளைக்கு
விழுதுகள் தூண்கள்! தூண்கள்
ஆலினைச் சுற்றி நிற்கும்
அருந்திறல் மறவர்! வேரோ
வாலினைத் தரையில் வீழ்த்தி
மண்டிய பாம்பின் கூட்டம்!
நீலவான் மறைக்கும் ஆல்தான்
ஒற்றைக்கால் நெடிய பந்தல்!
- பாரதிதாசன்

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக.**

1. திறல் - ---------------
2. மறவர் - ---------------

விடைகள்
1. வலிமை
2. வீரம்

**2. பிரித்து எழுதுக.**

1. அருந்திறல் - -----------------
2. ஒற்றைக்கால் - ------------------

1. அருமை + திறல்
2. ஒற்றை + கால்

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ‘அழகின் சிரிப்பு’ நூலை எழுதியவர் --------------------
2. பாரதிதாசனின் இயற்பெயர் --------------------
3. பாரதிதாசன் பிறந்த ஊர் --------------------

1. பாரதிதாசன்
2. கனக சுப்புரத்தினம்
3. புதுச்சேரி

### ஆ) குறுவினா

**1. அழகின்சிரிப்பு – குறிப்பு எழுதுக.**

**அழகின்சிரிப்பு :-**

1. அழகின் சிரிப்பு பாரதிதாசன் இயற்றிய நூல்களுள் ஒன்றாகும்.
2. இந்நூல் இயற்கை அழகும், கற்பனைநயமும், உவமை நயமும் நிறைந்த பாடல்களின் தொகுப்பு ஆகும்.

### இ) சிறுவினாக்கள்

**1. ‘பாரதிதாசன்’ – குறிப்பு எழுதுக.**

1. பாரதிதாசன் புதுச்சேரியில் கனகசபை - இலக்குமி அம்மையாருக்கு 29.04.1891 அன்று மகனாய்ப் பிறந்தார்.
2. இவரின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம் ஆகும்.
3. இவர் பாண்டியன் பரிசு, குடும்பவிளக்கு, இருண்டவீடு, அழகின் சிரிப்பு போன்ற பல நூல்களை இயற்றினார்.
4. பாரதிதாசனின் சிறப்புப்பெயர்கள் பாவேந்தர், புரட்சிக்கவிஞர் ஆகும்.
5. இவர் 21-04-1964 அன்று இயற்கை எய்தினார்.

**2. ஆலமரத்தின் விழுதும் வேரும் எவற்றைப்போன்று இருந்ததாகப் பாரதிதாசன் பாடுகின்றார்?**

**1. ஆலமரத்தின் விழுது (உவமை) :-**

வீட்டின் விட்டம் போல் வளர்ந்துள்ள ஆலமரத்தின் விழுதாகிய தூண்கள் ஆலமரத்தைச் சுற்றி நிற்கும் பெரும் வலிமைமிக்க வீரர்கள் போல் இருந்தன.

**2. ஆலமரத்தின் வேர்கள் (உவமை) :-**

ஆலமரத்தின் வேர்கள், தரையில் வால்களை ஊன்றித் தோன்றும் நெருங்கிய பாம்புக்கூட்டங்கள் போலத் தோன்றுகின்றன எனப் பாரதிதாசன் பாடுகிறார்.

## இயல் 3 — 3. காட்டுயிரிகள் — உரைநடைப்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. பிரித்து எழுதுக.**

1. காட்டுயிரிகள் - ----------------
2. சிற்றாறு - --------------
3. ஒன்றையொன்று - --------------
4. ஐம்பூதங்கள் - -------------
5. புகலிடம் - ---------------

**விடைகள்**

1. **காடு + உயிரிகள்**
2. **சிறுமை + ஆறு**
3. **ஒன்றை + ஒன்று**
4. **ஐந்து + பூதங்கள்**
5. **புகல் + இடம்**

**2. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பழந்தமிழ் இலக்கணநூல் ------------- — **தொல்காப்பியம்**
2. மரம் ------------- உயிர் — **ஓரறிவு**
3. உலகிலேயே அதிக மழைபெறும் இடம் -------------- — **சிரபுஞ்சி**
4. வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் ---------- ஆண்டில் இயற்றப்பட்டது. — **1972 – ஆம்**

### ஆ) குறுவினாக்கள்

**1. எழிலுக்குக் கொடுக்கப்பட்ட கட்டுரைப் போட்டியின் தலைப்பு என்ன?**

எழிலுக்குக் கொடுக்கப்பட்ட கட்டுரைப் போட்டியின் தலைப்பு 'காட்டுயிரிகள்' ஆகும்.

**2. நீர் மாசடைவதற்கான காரணம் என்ன?**

1. நீர் மாசடைவதற்கு நாமே முதல் காரணமாக இருக்கிறோம்
2. அருவிகளில் மூலிகைகள் கலந்து வீழும் நீரில் இயற்கையாகக் குளிக்காமல், செயற்கை வேதிப்பொருள்களான சோப்பு, ஷாம்பு முதலியவற்றைக் குளிக்கப் பயன்படுத்துகின்றனர்.
3. இதனால் அங்கு வாழும் விலங்குகளும் இயற்கை நீரைக் குடிக்க முடியாமல் நீா் மாசடைகிறது.

**3. நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள் யாவை?**

**நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள் :-**

1. ஐம்பூதங்கள், உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களும் உள்ளன.
2. **ஐம்பூதங்கள்** : நிலம், நீர், தீ, காற்று, வானம்
3. **உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்கள்** : ஓரறிவு முதல் ஆறறிவு வரை அடங்கும்.

**4. இயற்கைச் சமநிலை என்றால் என்ன?**

**இயற்கைச் சமநிலை :-**

விலங்கினங்கள் எண்ணிக்கையில் ஒன்றையொன்று அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காணப்படாமல் சமநிலையில் இருப்பதே 'இயற்கை சமநிலை' எனப்படும்.

**5. உணவுச்சங்கிலி என்றால் என்ன? சான்று தருக.**

**உணவுச்சங்கிலி :-**

1. உயிரினங்கள் வாழ்வதற்காக உணவை உட்கொள்கின்றன. உணவில் ஆற்றல் உள்ளது.
2. ஓர் உயிரியிலிருந்து மற்றொரு உயிரிக்கு உணவு மூலம் ஆற்றல் சங்கிலித் தொடர்போலக் கிடைப்பது உணவுச்சங்கிலி எனப்படும்.
3. உணவுச்சங்கிலி தாவரங்களிலிருந்தே முதலில் தொடங்குகிறது.

**சான்று** : மான், புல்லை உணவாகக் கொள்கிறது. சிங்கம் மானை உணவாகக் கொள்கிறது.

**6. வனவிலங்கு வாரம் எப்போது முதல் கொண்டாடப்பட்டு வருகிறது?**

**வனவிலங்கு வாரம் :-**

அக்டோபர் முதல் வாரத்தை அரசு வனவிலங்கு வாரமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

### இ) சிறுவினாக்கள்

**1. ஓரறிவுமுதல் ஆறறிவுவரை உள்ள உயிர்களாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவன யாவை?**

**ஓரறிவுமுதல் ஆறறிவுவரை உள்ள உயிர்களாகத் தொல்காப்பியர் கூறுவன :-**

**1. ஓரறிவு உயிர்கள்:**

மெய்யினால் அறியக்கூடிய உயிர்கள் அனைத்தும் ஓரறிவு உயிர்கள் ஆகும்.

**எடுத்துக்காட்டு:** புல், மரம்

2. **ஈரறிவு உயிர்கள்:**
   மெய், வாய், கண் முதலியவற்றால் அறியும் உயிர்கள் அனைத்தும் ஈரறிவு உயிர்கள் ஆகும்
   **எடுத்துக்காட்டு:** நத்தை, சங்கு
3. **மூவறிவு உயிர்கள்:**
   மெய், வாய், மூக்கு முதலியவற்றால் அறியும் உயிர்கள் அனைத்தும் மூவறிவு உயிர்கள் ஆகும்.
   **எடுத்துக்காட்டு:** எறும்பு, கரையான், அட்டை
4. **நாலறிவு உயிர்கள்:**
   மெய், வாய், மூக்கு, கண் ஆகியவற்றால் அறியும் உயிர்கள் நாலறிவு உயிர்கள் ஆகும்.
   **எடுத்துக்காட்டு:** நண்டு, தும்பி, வண்டு
5. **ஐயறிவு உயிர்கள்:**
   மெய், வாய், மூக்கு, கண், செவி முதலியவற்றால் அறியும் உயிர்கள் ஐயறிவு உயிர்கள் ஆகும்.
   **எடுத்துக்காட்டு:** விலங்கு, பறவை
6. **ஆறறிவு உயிர்கள்:**
   மெய், வாய், மூக்கு, கண், செவி, மனம் முதலியவற்றால் அறியும் உயிர்கள் ஆறறிவு உயிர்கள் ஆகும்.
   **எடுத்துக்காட்டு:** மனிதர்கள். இவ்வாறாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**2. காடுகளால் விளையும் நன்மைகள் யாவை?**

**காடுகளால் விளையும் நன்மைகள் :-**

1. மழை பெய்வதற்குக் காடுகள் காரணமாய் உள்ளன.
2. வனவிலங்குகளுக்குப் புகலிடமாகவும் காடுகள் பயன்படுகிறது.
3. மண் அரிப்பைத் தடுக்கவும் காடுகள் காரணமாக உள்ளன.
4. சிற்றாறுகள் தோன்றக் காரணமாக உள்ளது.
5. தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் காடுகள் பயன்படுகிறது.
6. மூலிகைகள், மருந்துப் பொருள்கள் என எண்ணற்ற நன்மைகள் நமக்குக் காடுகளால் விளைகின்றன.
7. காட்டு விலங்குகளிடமிருந்து தந்தம், தோல், நறுமணப்பொருள், தேன் முதலிய பல்வகைப் பொருள்கள் கிடைக்கின்றன.

**3. வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் எப்போது இயற்றப்பட்டது? அச்சட்டக் கருத்துகளை எழுதுக.**

**வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் :-**

வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் **1972 –** ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.

**கருத்துகள் :-**

1. வனவிலங்குகளை வேட்டையாடுவதைத் தடுக்கிறது.
2. அழிந்து வரும் விலங்குகளை முற்றழிவிலிருந்து பாதுகாக்க வழிவகைச் செய்கிறது.

## ஈ) நெடுவினாக்கள்

**1. உணவுச்சங்கிலி, உணவுவலை குறித்து எழுதுக.**

**உணவுச்சங்கிலி :-**

1. உயிரினங்கள் வாழ்வதற்காக உணவை உட்கொள்கின்றன. உணவில் ஆற்றல் உள்ளது.
2. ஓர் உயிரியிலிருந்து மற்றொரு உயிரிக்கு உணவு மூலம் ஆற்றல் சங்கிலித் தொடர்போலக் கிடைப்பது உணவுச்சங்கிலி எனப்படும்.
3. உணவுச்சங்கிலி தாவரங்களிலிருந்தே முதலில் தொடங்குகிறது.

**உணவு வலை :-**

1. புல்லை மான், உணவாகக் கொள்கிறது. மானை சிங்கம் உணவாகக் கொள்கிறது.
2. பூச்சியைத் தவளை உணவாகக் கொள்கிறது. தவளையைப் பாம்பு கொல்வதும் அந்தந்த உயிரிகளின் இயல்பாகும்.
3. உயிரிகள் உணவுக்காக ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன. இவையே உணவு வலை என்பர்.

**2. விலங்குகளைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் யாவை?**

**1. விலங்குகளைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் :-**

1. விலங்குகளைப் பாதுகாக்க இந்தியக் காட்டுவாழ் உயிரிகள் வாரியம் அமைக்கப்பட்டது.
2. வனவிலங்கு வாரமாக அரசு அக்டோபர் முதல் வாரத்தைக் கொண்டாடி வருகிறது.
3. வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972 - ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.
4. உலக வனவிலங்கு நாள் அக்டோபர் திங்கள் நான்காம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

**2. திட்டங்களின் கருத்துக்கள் :-**

1. வனவிலங்குகளை வேட்டையாடுவதைத் தடுக்கிறது.
2. அழிந்து வரும் விலங்குகளை முற்றழிவிலிருந்து பாதுகாக்க வழிவகைச் செய்கிறது.

**3. வனவிலங்குகளுக்குப் பாதுகாப்பு இடங்கள் :-**
1. நமது நாட்டில் பதினேழு வனவிலங்குப் பாதுகாப்பு இடங்கள் உள்ளன.
2. அறுபத்தாறு தேசிய வனவிலங்குப் பூங்காக்களும் உள்ளன.
3. முந்நூற்று அறுபத்தெட்டுப் புகலிடங்களும் உள்ளன.

**3. இயற்கை வளங்களைப் பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும்?**
**இயற்கை வளங்களைப் பாதுகாக்கக் கடைப்பிடிக்க வேண்டியவை :-**

**1. இயற்கை சமநிலை வேண்டும் :-**
1. உயிரிகளின் ஆற்றலுக்கு அடிப்படையாய் விளங்கும் தாவரங்களைப் பாதுகாக்க வேண்டும்.
2. தாவரங்களும், விலங்குகளும் எண்ணிக்கையில் ஒன்றையொன்று சமநிலையில் இருத்தல் வேண்டும்.

**2. நீர் நிலைகளைப் பாதுகாத்தல் வேண்டும் :-**
1. தாவரங்களை, மனிதர்கள், விலங்குகளையும் பாதுகாக்க நீர்நிலைகளை மாசுபடுத்தாமல் காத்தல் வேண்டும்.
2. மூலிகைகள் கலந்து வரும் அருவி நீர்நிலைகளில் செயற்கை வேதிப்பொருள்களைக் (சோப்பு, ஷாம்பு) குளிக்கப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

**3. காடுகளைப் பாதுகாக்க வேண்டும் :-**
1. மனிதர்களின் தேவைகளுக்காகக் காடுகளை அழிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
2. காட்டுத்தீ ஏற்படாமல் இருக்க அதிக அளவில் மரங்களை வளர்க்க வேண்டும்.
3. பல்வேறு நன்மைகள் தரக்கூடிய காடுகளைப் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**4. வனவிலங்கு நாளில் வளங்களைப் பாதுகாததல் :-**
1. இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் என்பது தனியொரு மனிதனால் செய்ய இயலாது.
2. உலக வனவிலங்கு நாள் கொண்டாடப்படும் போது அந்நாளில் வனவிலங்குகளையும், காடுகளையும் அழிக்காமல் பாதுகாக்க நாம் உறுதிமொழி ஏற்க வேண்டும்.

## இயல் 3 | 4. சென்னை அருங்காட்சியகம் | துணைப்பாடப்பகுதி

### நெடுவினாக்கள்

**1. சென்னை அருங்காட்சியகம் குறித்துக் கட்டுரை எழுதுக.**

1. முன்னுரை
2. அருங்காட்சியகம் தோற்றம்
3. அருங்காட்சியகம் அமைப்பு
4. தலைமைக் கட்டடத்தில் இருப்பவை. (கீழ்த்தளம்)
5. தலைமைக் கட்டடம் மேல்தளத்தில் இருப்பவை.
6. எலும்புக்கூடுகளின் அதிசயம்
7. முன்கட்டிடத்தில் இருப்பவை
8. வெண்கலக் காட்சிக்கூடம்
9. சிறுவர் அருங்காட்சியகம்
10. தேசிய ஓவியக் காட்சிக்கூடம்
11. முடிவுரை.

**1. முன்னுரை :-**
'சென்னை அருங்காட்சியகம்' – என்ற இக்கதையின் வாயிலாக நம் முன்னோர்களின் காலக்கட்டத்தில் பயன்படுத்திய பொருட்களும், தற்போது அழிந்துவிட்ட நிலையிலும் அவை இருந்ததற்கான அடையாளங்களை அறிவதற்கு அருங்காட்சியகம் உதவிபுரிகிறது.

**2. அருங்காட்சியகம் தோற்றம் :-**
"அருங்காட்சியகம் என்பது அரிதான பழம்பொருள்களைத் தொகுத்து வைத்துள்ள இடமாகும்." சென்னை எழும்பூரில் அருங்காட்சியகம் அமைந்துள்ளது. இது கி.பி.1851 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இக்காட்சியகம் முதலில் மைய அருங்காட்சியகம் என்று வழங்கப்பட்டது.

**3. அருங்காட்சியகம் அமைப்பு :-**
அருங்காட்சியகத்தில் பதின்மூன்று காட்சியகங்கள் உள்ளன. அவை தலைமைக் கட்டடம், முன் கட்டடம், வெண்கலக் காட்சிக்கூடம், சிறுவர் அருங்காட்சியகம், தேசிய ஓவியக் காட்சிக்கூடம், சமகால ஓவியக் காட்சிக்கூடம் என ஒவ்வொரு கட்டடத்திற்கும் தனித்தனிப் பெயர்கள் சூட்டப்பட்டு ஆறு கட்டடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

**4. தலைமைக் கட்டடத்தில் இருப்பவை. (கீழ்த்தளம்) :-**

தலைமைக் கட்டடம் இரண்டு பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. அவை கீழ்த்தளம், மேல்தளம் என்பவையாகும். கீழ்த்தளத்தில் சிற்பங்கள், அமராவதி கற்சிலைகள், தஞ்சாவூர்த் தளவாடங்கள், தாமிரத்தகட்டுச் சாசனங்கள் உள்ளன. மேலும் ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் முதலிய விலங்கினங்கள் உயிருடன் இருப்பதைப்போலப் பதப்படுத்தப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**5. தலைமைக் கட்டடம் மேல்தளத்தில் இருப்பவை :-**

தலைமைக் கட்டடம் இரண்டாம் பகுதியான மேல்தளத்தில் அஞ்சல்தலைகள், தாவரவியல் தொடர்பானவை, பவளப்பாறைகள், முதுகெலும்பற்ற உயிரினங்கள், மீன்கள், கல்வெட்டியல் சிந்துவெளி நாகரிகம் தொடர்பானவற்றைக் காணலாம்.

**6. எலும்புக்கூடுகளின் அதிசயம் :-**

ஆப்பிரிக்க யானையின் மிகப்பெரிய எலும்புக்கூட்டின் மாதிரி வடிவம், உலகிலேயே மிகப்பெரிய விலங்கான திமிங்கல எலும்புக்கூட்டின் மாதிரி வடிவம் முதலியன வியப்பான அதிசயமாகும்.

**7. முன்கட்டிடத்தில் இருப்பவை :-**

இக்கட்டிடத்தில் மானிடவியல் பகுதி அமைந்துள்ளது. தொல்லியல் பகுதியில் ஆதிகால மனிதனின் தோற்றம், வளர்ச்சி, அவன் பயன்படுத்திய கற்கருவிகள் ஆகியன உள்ளன. வரலாற்று மன்னர்களின் படைக்கருவிகள், பழங்கால இசைக்கருவிகள், கலை, பண்பாட்டை விளக்கும் பொருள்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

**8. வெண்கலக் காட்சிக்கூடம் :-**

வெண்கலக் காட்சிக்கூடத்தில் தொல்லியல், நாணயவியல் பற்றியும் அறியலாம். வேதிக்காப்புப் பகுதிகளில் சைவ, வைணவ, பௌத்த, சமண மதங்களுக்கான வெண்கலச் சிற்பங்களைக் காணலாம். ஒவ்வொரு காலத்திலும் பயன்படுத்தப்பட்டு வந்த நாணயங்கள், பதக்கங்கள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

**9. சிறுவர் அருங்காட்சியகம் :-**

சிறுவர் அருங்காட்சியகத்தில் அறிவியல், போக்குவரத்து, தொழில்நுட்பம், பல்வேறு வகை ஆடைகளுடன் கூடிய பொம்மைகள் முதலானவற்றைப் பார்க்கலாம்.

**10. தேசிய ஓவியக் காட்சிக்கூடம் :-**

இக்காட்சிக்கூடத்தில் மிகச்சிறந்த ஓவியங்கள், மரபு ஓவியங்கள், சிற்றோவியங்கள், தஞ்சாவூர் ஓவியம் முதலானவற்றையும் காணலாம். சமகால ஓவியக் காட்சிக்கூடத்தில் பிரித்தானிய ஓவியங்களும், தற்கால ஓவியங்களும் கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

**11. முடிவுரை :-**

'சென்னை அருங்காட்சியகம்' – என்ற இக்கதையின் வாயிலாக அருங்காட்சியகம் பற்றிய அனைத்துத் தகவல்களையும் பெற்றுக்கொண்டோம். இதுபோன்ற அருங்காட்சியங்களுக்குச் செல்வோம். அரிதான பழம்பொருள்களைக் குறித்து அதிகமாய் அறிந்துக்கொள்வோம்.

## இயல் 3 — 5. வேற்றுமை — இலக்கணப்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **விடைகள்**

1. இரண்டாம் வேற்றுமை உருபு ------------- எனவும் அழைக்கப்பெறும். **1. செயப்படுபொருள் வேற்றுமை**
2. கருவி, கருத்தா ஆகிய பொருள்களில் ------------ உருபு வரும். **2. ஆல், ஆன்**
3. ஐந்தாம் வேற்றுமையில் வரும் 'இல்' உருபு -------------- பொருளில் வரும். **3. ஏதுப்**
4. எட்டாம் வேற்றுமை -------------- பொருளில் வரும். **4. விளிப்**
5. வாலிக்குப் பகைவன் சுக்ரீவன் இத்தொடரில் உள்ள 'கு' உருபு -------- என்னும் பொருளில் வந்துள்ளது. **5. பகை**
6. முதல் வேற்றுமைக்கு ------------------ இல்லை. **6. உருபு**

**2. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. காட்டை அழித்தான் | - ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு | - **அழித்தல்** |
| 2. புலியைப் போன்றவன் | - பொருட்டு | - **ஒத்தல்** |
| 3. கூலியின் பொருட்டு வேலை | - அழித்தல் | - **பொருட்டு** |
| 4. என்னுடைய வீடு | - ஒத்தல் | - **ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு** |
| | - எல்லை | |

**3. பொருத்துக :-**

| | | |
|---|---|---|
| 1. முதல் வேற்றுமை | - கிளையின் கண் காக்கை | - **அவன் யார்?** |
| 2. மூன்றாம் வேற்றுமை | - கல்வியில் பெரியவர் கம்பர் | - **மரத்தால் செய்தது** |
| 3. ஐந்தாம் வேற்றுமை | - மரத்தால் செய்தது. | - **கல்வியில் பெரியவர் கம்பர்** |
| 4. ஏழாம் வேற்றுமை | - அவன் யார்? | - **கிளையின் கண் காக்கை** |
| | - வீட்டைக் கட்டினான் | |

## ஆ) குறுவினாக்கள்

**1. வேற்றுமையாவது யாது? அதன் வகைகளைக் கூறுக.**

**வேற்றுமை :-**

பெயர்ச்சொல்லின் பொருளைச் செயப்படுபொருளாகவும், கருத்தாவாகவும் வேறுபடுத்துவதை 'வேற்றுமை' எனப்படும்.

**வேற்றுமை வகைகள்**:- வேற்றுமை எட்டு வகைப்படும்.

1. முதல் வேற்றுமை
2. இரண்டாம் வேற்றுமை
3. மூன்றாம் வேற்றுமை
4. நான்காம் வேற்றுமை
5. ஐந்தாம் வேற்றுமை
6. ஆறாம் வேற்றுமை
7. ஏழாம் வேற்றுமை
8. எட்டாம் வேற்றுமை

**2. இரண்டாம் வேற்றுமை உருபுகள் எவ்வெப்பொருளில் வரும்?**

1. **இரண்டாம் வேற்றுமை உருபு : 'ஐ'**
2. இரண்டாம் வேற்றுமை உருபானது அறுவகைப் பொருளில் வரும். அவையாவன ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்ற பொருளில் வரும்.

**3. மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை?**

**மூன்றாம் வேற்றுமை உருபுகள் :-**

மூன்றாம் வேற்றுமைக்குரிய உருபுகள் "ஆல், ஆன், ஒடு, ஓடு" என்பனவாகும்.

**4. கருத்தா எத்தனை வகைப்படும்? சான்று தருக.**

**கருத்தா வகைகள்** : கருத்தா இரண்டு வகைப்படும். அ. இயற்றுதல் கருத்தா ஆ. ஏவுதல் கருத்தா

**அ) இயற்றுதல் கருத்தா சான்று :** தச்சரால் நாற்காலி செய்யப்பட்டது.

**விளக்கம்** : தச்சர் தாமே முயன்று கருவிகளைக் கொண்டு, 'நாற்காலி செய்தார்'. — எனவே தச்சர் இயற்றுதல் கருத்தா ஆவார்.

**ஆ) ஏவுதல் கருத்தா சான்று :** கோவில் அரசனால் கட்டப்பட்டது.

**விளக்கம் :** கோவிலை அரசன் கட்டவில்லை. உரிய பணியாளர்களை ஏவி 'கோவிலைக் கட்டினார்'. எனவே அரசன் 'ஏவுதற் கருத்தா' ஆவார்.

**5. நான்காம் வேற்றுமை உருபு யாது? அது எவ்வெப்பொருளில் வரும்?**

1. நான்காம் வேற்றுமை உருபு : கு, ஆக
2. நான்காம் வேற்றுமை உருபானது கொடை, பகை, நட்பு, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருளில் வரும். 'கு' வுக்குப் பதிலாகப் 'பொருட்டு, நிமித்தம்' என்பன சொல்லுருபுகளாக வரும்.

**6. ஆறாம் வேற்றுமையில் ஒருமைக்கு வரும் உருபுகள் யாவை? சான்று தருக.**

ஆறாம் வேற்றுமையில் ஒருமைக்கு வரும் உருபுகள் : அது, ஆது

**சான்று** : அது — **எனது** புத்தகம், ஆது — **எனாது** வீடு

## இயல் 3 — மரபுத்தொடர்கள் — மொழித்திறன்பகுதி

**1. மரபுத்தொடர்களை அமைத்து எழுதுதல்.**

1. கண்ணனுக்கு வேலை கிடைக்கவில்லை, உணவுக்கே **தாளம் போடுகிறான்.**
   தாளம் போடுதல் - மரபுத்தொடராகும். இதன் பொருளாவது, **துன்பப்படுதல்.**
2. முருகனுக்கு **கயிறு திரிப்பதே** வேலையாகிவிட்டது. (இல்லாததைச் சொல்லுதல்)
3. பாவேந்தர் பாரதிதாசன் தமிழிலக்கிய வானில் **கொடிகட்டிப் பறந்தார்**. ( தனிப்புகழோடு வாழ்ந்தார்)
4. தான் பணத்தைத் திருடவில்லையென்று கண்ணன் **முதலைக்கண்ணீர்** வடித்தான். (பொய்யாக அழுதல்,ஏமாற்றுதல்)
5. செய்தி தெரியுமா? வேலனுக்கு **ஆணை வந்துவிட்டது**. (வேலை கிடைத்துவிட்டது)

**2. கீழ்க்காணும் மரபுத்தொடர்களை உரிய இடங்களில் பொருத்தி எழுதுக.**

(புத்தகப்பூச்சி, வாழையடிவாழையாக, மலையேறிவிட்டது, பெருஞ்செலவாணி, சீட்டுக்கிழிந்துவிட்டது)

அ) அவன் குடும்பம் …………… ஊருக்குத் தொண்டாற்றி வருகிறது. **வாழையடிவாழையாக**

ஆ) அலுவலகத்தில் வேலை நேரத்தில் தூங்கியதால் கந்தனுக்கு ………….. **சீட்டுக்கிழிந்துவிட்டது**

இ) கதிரவனுக்கு உலகில் நடப்பது எதுவும் தெரியாது. அவன் ஒரு …………. **புத்தகப்பூச்சி**

ஈ) சிறுவயதிலேயே பெண்களுக்குத் திருமணம் செய்வது …………. **மலையேறிவிட்டது**

உ) முருகன் கையிலிருந்த பொருளை இழந்துவிட்டான். அவன் ………….. **பெருஞ்செலவாணி**

**3. தமிழெண்களுக்கு அரபு எண்களைப் பொருத்துக.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. உ+ ச | = | 14 | 2. அ +உ | = | 19 | 3.ரு +கூ | = | 12 |
| 4. க0 +உ | = | 10 | 5. கஅ +க | = | 6 | | | |

**4. விளம்பரங்கள் / அறிவிப்புகள் பார்த்துப் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளிக்க.**




1. இந்த விளம்பரம் எதனைப்பற்றியது? **வேலைவாய்ப்பு**
2. வேலை வாய்ப்பு வழங்கும் நிறுவனம் எங்கு அமைந்துள்ளது?
   **67, அம்மையப்பன் தெரு, சென்னை 600 002**
3. விண்ணப்பிப்போர் பெற்றிருக்கவேண்டிய கல்வித்தகுதிகள் யாவை?
   **முதுகலை நிருவாகவியல், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் புலமை**
4. நேர்காணல் எப்போது? **15-09-2015 காலை 10 மணி**
5. விண்ணப்பிக்கும் பணியின் பெயர் என்ன? **வரவேற்பாளர்**

**5. கட்டுரை பயிற்சி : எங்கும் கணினி எதிலும் கணினி**

**1. முன்னுரை**
**2. கணினியின் தோற்றம்**
**3. வளர்ச்சி**
**4. கணினியின் வகைகள்**
**5. இணையம்**
**6. இணையதள வசதி**
**7. கணினிவழிக்கல்வி**
**8. பயன்படும் துறைகள்**
**9. உலகம் உள்ளங்கையில்**
**10. முடிவுரை**

**1. முன்னுரை**

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்புகளுள் முதன்மையானது கணினி. அறிவியல் தாயின் அற்புதக் குழந்தையாக விளங்குவது கணினி. அன்றாட வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் நீக்கமற நிறைந்துள்ளது கணினி. கணினி பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**2. கணினியின் தோற்றம்:**

அபாகஸ் எனப்படும் மணிச்சட்டக் கணக்கிடும் கருவியே கணினியின் முன்னோடியாகக் கருதப்படுகிறது. கி.பி.1883இல் சார்லஸ் பாப்பேஜ் என்னும் ஆங்கிலேயர் முதன்முதலில் கணினியை வடிவமைத்தார். அவரே ‘கணினியின் தந்தை’ என்று அழைக்கப்படுகிறார்.

**3. கணினியின் வளர்ச்சி நிலைகள்**

முதன்முதலில் உருவாக்கப்பட்ட கணினி ஒரு பெரிய அறையின் அளவுக்கு இருந்தது. பின்னர் பல தலைமுறைகளைக் கடந்து இன்று கையடக்க அளவில் கணினிகள் கிடைக்கின்றன. முதல் தலைமுறைக்கணினியில் வெற்றிடக்குழாய்கள் பயன்படுத்தப்பட்டன. இரண்டாம் தலை முறைக் கணினிகளில் டிரான்சிஸ்டர்களும் மூன்றாம் தலைமுறைக்கணினிகளில் ஒருங்கிணைந்த மின்சுற்றுகளும் பயன்பட்டன. தற்போதைய நான்காம் தலைமுறைக்கணினிகளில் மைக்ரோ பிராசசர் எனப்படும் நுண்செயலிகள் பயன்படுகின்றன.

**4. கணினியின் வகைகள்.**

கணினிகள் அவற்றின் வடிவத்தையும் அளவையும் அடிப்படையாகக் கொண்டு மேசைக்கணினி, மடிக்கணினி, கையடக்கக்கணினி என வகைப்படுத்தப்பட்டுள்ளன. விண்வெளி ஆய்வு, செயற்கைக்கோள்கள் ஏவுதல் போன்ற செயல்பாடுகளில் மீத்திறக்கணினிகளின் செயல்திறன்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

**5. இணையம் :**

உலகில் உள்ள அனைத்துக் கணினிகளையும் செயற்கைக் கோள்களின் தொடர்பால் இணைப்பதே இணையம் ஆகும். உலகின் எந்த மூலையில் உள்ளவரும் செய்திகள் தமக்குள் தகவல் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள உதவுவது இணையம் ஆகும். இணைய முகவரிகள் WWW. என்னும் ஆங்கில எழுத்துகளில் தொடங்குகின்றன. வையக விரிவு வலை என்பதன் சுருக்கமே இவ்வாறு குறிக்கப்படுகிறது.

**6. இணையத்தளம்:**

இணையதளத்தின் உதவியால் பயணச்சீட்டு முன்பதிவு, வர்த்தகம், தகவல் தொடர்பு, வங்கிச்சேவைகள், போன்றவை எளிதாகவும் விரைவாகவும் நடைபெறுகின்றன.

**7. கணினிவழிக்கல்வி**

இணையவழிக்கல்வி, இணையவழித்தேர்வுகள் நடைபெறுகின்றன. கணினிவழிக்கல்வியின் அவசியத்தை உணர்ந்த தமிழக அரசு மேல்நிலை மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

**8. பயன்படும் துறைகள் :**

அனைத்து அரசுத்துறைகளும் இன்று கணினி மயமாக்கப்பட்டுள்ளன. வங்கிகள், தகவல்தொடர்புத்துறை, பயணச்சீட்டு முன்பதிவு, மருத்துவத்துறை, வடிவமைப்புத்துறை, தொழில்துறைகள், விண்வெளித்துறை, வானியல்ஆய்வு, செயற்கைக்கோள் ஒளிபரப்பு போன்ற துறைகளில் கணினியின் பங்கு அளப்பரியது.

**9. உலகம் உள்ளங்கையில் :**

தகவல்தொடர்பின் வளர்ச்சி, இணையதள வசதிகள், மின்னஞ்சல் ஆகியவற்றால் காலமும் தூரமும் வெகுவாய்க் குறைந்து விட்டன. கண் இமைக்கும் பொழுதினில் கண்டங்களைக் கடந்து பேசலாம்; உள்ளங்கைகளில் உள்ள அலைபேசிகளிலும் கையடக்கக் கணினிகளிலும் உலக நடப்புகளை அறிந்து கொள்ளலாம். உலகம் இன்று உள்ளங்கைகளுக்குள் சுருங்கிவிட்டது.

**10. முடிவுரை :**

‘எங்கும் கணினி எதிலும் கணினி’ என்று நாம் வாழும் இக்காலம் கணினி யுகம் ஆகும். இனிவரும் காலங்களில் கணினியறிவற்றோர் கண்ணற்றோராகவே கருதப்படுவர். காலத்தை வெல்லும் கணினிக் கல்வியை அனைவரும் கற்போம். காலத்தை வெல்வோம்.

**6. வாழ்க்கை குறிப்புகளை கொண்டு உரைப்பகுதியாக எழுதுக.**




**பாரதிதாசன்**

பாரதிதாசன் புதுச்சேரியில் 1891ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் நாள் பிறந்தார். அவரின் பெற்றோர் கனகசபை, இலக்குமி ஆவர். பாரதிதாசனுக்குப் பெற்றோர் இட்டப் பெயர் சுப்புரத்தினம் ஆகும்.

இவர் பாரதியாரிடம் கொண்ட நெருங்கிய தொடர்பினால் பாரதிதாசன் எனத் தம் பெயரை மாற்றிக்கொண்டார். பின்னர் பெரியாரின் சிந்தனையால் ஈர்க்கப்பட்ட அவர் பெரியாரின் பகுத்தறிவுகோட்பாடுகளை பின்பற்றியதல்லாமல் கவிதை வடிவிலும் தந்தார்.

இவரின் புரட்சிகரமான கவிதைகளால் புரட்சிகவி, பாவேந்தர் எனப் பலபெயர்களால் பாராட்டப்பெற்றார். பாரதிதாசன் இருண்டவீடு, பாண்டியன் பரிசு, குடும்பவிளக்கு, அழகின் சிரிப்பு, கண்ணகி புரட்சிக்காப்பியம், தமிழியக்கம் போன்ற பல நூல்களை இயற்றினார். இவர் 1964 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் நாள் இயற்கை எய்தினார்.

**7. கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**



படத்தில் நீங்கள் காணும் பறவை மரகதப்புறாவாகும். தமிழ்நாட்டின் தேசியப் பறவையாக அது விளங்குகிறது. இப்பறவை மழைக்காடுகளிலும், அடர்ந்த ஈரமான இடங்களிலும் வாழ்கின்றது. இப்பறவையின் இறக்கைகள் மரகதப்பச்சை நிறத்தில் இருக்கும்.

மரகதப்புறா, பறப்பதனைவிட நிலத்தில் நடப்பதனையே மிகவும் விரும்புகிறது. இப்பறவை விதைகள், பழங்கள், பல்வேறு வகையான தாவரங்களை விரும்பி உண்ணும். இப்பறவை மரங்களில் கூடுகட்டி, முட்டையிடுகிறது. இப்பறவையின் முட்டை மஞ்சள் கலந்த வெண்ணிறத்தில் காணப்படும். இப்பறவை எளிதாகப் பழகக்கூடிய வகையில் உள்ளது.

**வினாக்கள்:**

1. தமிழ்நாட்டின் தேசியப் பறவை எது? **மரகதப்புறா**
2. மரகதப்புறா எங்கு வாழ்கிறது? **மழைக்காடுகளிலும் அடர்ந்த ஈரமான இடங்களிலும் வாழ்கிறது**
3. மரகதப்புறா எதனை விரும்பி உண்கிறது? **விதைகள், பழங்கள், பல்வேறுவகையான தாவரங்கள்.**
4. மரகதப்புறா முட்டையின் நிறம் யாது? **மஞ்சள் கலந்த வெண்ணிறம்**
5. மரகதப்புறா, பறப்பதனைவிட ............... விரும்புகிறது. **விடை : நடப்பதையே**

**8. காட்டுயிரிகள் பாடத்தில் இடம்பெறும் பாடப்பொருளுக்கேற்ப எளிய உணவுச்சங்கிலி ஒன்றனை வரைக.**




## கற்றலடைவு சிறுமதிப்பீடு

**அ. பொருள் தருக.** **5x1=5**

1. சோலை - ------------------ **பூங்கா**
2. வனம் - ------------------ **காடு**
3. திறல் - ------------------ **வலிமை**
4. மறவர் - ------------------ **வீரர்**
5. தூலம் - ------------------ **உத்திரம், விட்டம்**

**ஆ. வினாக்களுக்கு விடையளிக்க.** **5x1=5**

**1. அருவிநீர் மாசடையக் காரணம் என்ன?**
மக்கள் செயற்கை வேதிப்பொருள்களைக் (சோப்பு, ஷாம்பு) குளிக்கப் பயன்படுத்துவதால் அருவிநீர் மாசடையக் காரணமாகிறது.

**2. இந்தியாவில் எத்தனை மடங்கு காடுகள் உள்ளன?**
இந்தியாவில் எட்டில் ஒரு மடங்கு காடுகள் உள்ளன

**3. தாவரங்கள் நமக்கு எவ்வாறு உதவுகின்றன?**
மண் அரிப்பைத் தடுத்தல், சிற்றாறுகள் தோன்றக் காரணமாக இருத்தல், தொழில் வளர்ச்சிக்கு உதவுதல், மருந்துப் பொருள்கள், மூலிகைகள் தருதல் போன்ற எண்ணற்ற நன்மைகள் நமக்குக் கிடைக்கின்றன.

**4. காட்டுவிலங்குகளினால் நமக்கு விளையும் நன்மைகள் யாவை?**
தந்தம், தோல் முதலிய பல்வகைப் பொருள்கள் காட்டுவிலங்குகளினால் நமக்குக் கிடைக்கின்றன.

**5. தாவரங்கள் பாதுகாக்கும் வழிமுறைகளுள் இரண்டனைக் கூறுக.**

1. மரங்கள் வெட்டுவதைத் தவிர்த்தல்.
2. நிலத்தில் பயிர்களைச் சாகுபடி செய்தல்.
3. மேய்ச்சல் நிலம், தரிசுநிலத்தில் கால்நடைகள் மேய்த்தல்.
4. தோட்டக்கலை செய்தல்

# தொகுத்தறி மதிப்பீடு
## இரண்டாம் பருவத்தேர்வு

8-ம் வகுப்பு மதிப்பெண்கள் - 60

**I. பொருள் தருக.** **2x1=2**

1. வாய்மை - ………………..
2. மறவர் - ……………….

**II. பிரித்து எழுதுக.** **2x1=2**

3. கோலமிட்டு - ………………..
4. தேசியப்பாடல் - ………………..

**III. சேர்த்து எழுதுக.** **2x1=2**

5. எட்டு+ தொகை - ……………….
6. அறம் + போராட்டம் - ………………..

**IV. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **5x1=5**

7. ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண்மணி ……….
8. திருமந்திரத்தின் புகழ்மிக்கத் தொடர் ……..
9. கம்பரை ஆதரித்த வள்ளல் …….
10. வீரமாமுனிவர் ……..நாட்டைச் சார்ந்தவர்.
11. உலகிலேயே அதிக மழைபெறும் இடம் ………..

**V. உரிய விடையைத் தேர்ந்து எழுதுக.** **3x1=3**

12. கயல்விழி என்பது …….
    அ) வேற்றுமைத் தொகை ஆ) உவமைத்தொகை இ) பண்புத்தொகை
13. சித்திரை வந்தாள் என்பது ……..
    அ) சினையாகு பெயர் ஆ) காலவாகு பெயர் இ) தொழிலாகுபெயர்
14. கிழமைப்பொருளில் வருவது ……
    அ) இரண்டாம் வேற்றுமை ஆ) ஐந்தாம் வேற்றுமை இ) ஆறாம் வேற்றுமை

**VI. பொருத்துக.** **5x1=5**

15. மலர்க்கரம் - கண்ணா வா
16. வினைத்தொகை - மரபு வழு
17. சிங்கம் கனைத்தது - தாமரை
18. விளித்தொடர் - மரத்தால் செய்தது
19. மூன்றாம் வேற்றுமை - செய்தொழில்

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **5x1=5**

20. வயலில் ஆட்டுக்கன்று மேய்கிறது. **வழு நீக்கி எழுதுக.**
21. **பொருத்தமான ஆகுபெயர்ச் சொற்களை நிரப்புக.**
    அ) உடைந்த ஏரியைப் பார்க்க ……..திரண்டு வந்தது. (மக்கள் / ஊரே)
    ஆ) தைப்பொங்கலுக்கு ……… அடிப்பர். (சுண்ணாம்பு, வெள்ளை)
22. **கோடிட்ட இடங்களை இரட்டைக்கிளவியால் நிரப்புக.**
    அ) மரக்கிளை ….. என முறிந்தது.
    ஆ) தங்கம்……….என மின்னுகிறது.

**23. பொருந்தாத சொல்லை எடுத்து எழுது.**
பொரியல், அவியல், சித்திரை, சுண்டல்

**24. தமிழ் எண்களைக் கூட்டுக.**
ரு + எ – ............

**VII. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** **4x2=8**

25. தேனை உண்ட வண்டு எவ்வாறு தோற்றமளித்தது?
26. தென்னாட்டின் ஜான்சிராணி என அழைக்கப்படுபவர் யார்? ஏன்?
27. உயிர் அழியக் காரணம் என்ன?
28. நொண்டி நாடகம் -குறிப்பு எழுதுக.
29. பாரதிதாசன் இயற்றிய நூல்கள் யாவை?
30. எழிலுக்குக் கொடுக்கப்பட்ட கட்டுரைப்போட்டியின் தலைப்பு யாது?

**IX. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** **2x4=8**

31. காந்தியடிகளின் பண்பு நலன்களைப் பாரதத்தாய் பாடல்வழி விளக்குக.
32. அறிவு வளர திருமூலர் கூறும் வழி யாது?
33. விடுதலைப்போராட்ட காலத்தில் தோன்றிய நாடகங்கள் யாவை?
34. காடுகளால் விளையும் நன்மைகள் யாவை?

**X. அடிபிறழாமல் எழுதுக.** **3+3=6**

35. ‘உடம்பார்’ எனத்தொடங்கும் திருமந்திரப்பாடல்.
36. ‘தூலம் போல்’ எனத்தொடங்கும் விழுதும் வேரும் பாடல்.

**XI. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** **2x2=4**

37. அடுக்குத்தொடர் என்றால் என்ன?
38. தொகைநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
39. சினையாகு பெயரைச் சான்றுடன் விளக்கு.
40. மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை?

**XII. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி.** **1x6=6**

41. மரத்தின் வேண்டுகோள் கதையைச் சுருக்கி எழுது.
42. காகிதம் தன் வரலாறு கூறுதல்
43. எங்கும் கணினி எதிலும் கணினி

**XIII. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.** **4x1=4**

தமிழ்நாட்டின் தேசியப்பறவை மரகதப் புறா. இவை மழைக்காடுகளிலும் அடர்ந்த ஈரமான இடங்களிலும் வாழ்கின்றன. மரகதப்புறா பறப்பதைவிட நடப்பதையே விரும்புகிறது. அப்பறவை விதைகள், பழங்கள், பல்வேறு தாவரங்களை விரும்பி உண்ணும். இப்பறவையின் முட்டை மஞ்சள் கலந்த வெண்மை நிறத்தில் காணப்படும்.

**வினாக்கள்:**

1. தமிழ்நாட்டின் தேசியப்பறவை எது?
2. மரகதப்புறா எங்கு வாழ்கிறது?
3. மரகதப்புறா எதனை உணர்த்துகிறது?
4. மரகதப்புறா முட்டையின் நிறம் யாது?